Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
EALING 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH


FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Quality Japanese Car Parts
Discount Prices
Japarts
08450 66 44 22
www.japarts.co.uk

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 49 May/June 2006
For News: 020 8279 0354

## உள்ளாட்சி சபைத் தேர்தல்:
## ஆறு தமிழ் கவுன்சிலர்கள் மீண்டும் தெரிவு, மேலும் இரு புதுமுகங்கள்






இடம்: கவுன்சிலர் சுரேஸ் சசிகலா
வலம்: கவுன்சிலர் மனோதர்மராஜா

மே 4ல் நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஏற்கனவே கவுன்சிலர்களாக இருந்து போட்டியிட்ட அறுவரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் சுரேஸ் சசிகலா (படம்), அகிலன் யோகநாதன் ஆகிய இருவரும் புதிதாக கவுன்சிலர்களாகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். லிபிரல் டெமொகிரட் கட்சியின் சார்பில் சதேக் கவுன்சிலுக்கு எலிசா பாக்கியதேவி மஅன் உம் கிங்ஸ்ரன் அப்ஒன் தேம்ஸ் கவுன்சிலுக்கு யோகநாதனும் ஏற்கனவே கவன்சிலர்களாக இருந்து தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். (தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)



**காணாமல் போன சிறுவன் ஏழு மாத மர்மத்தின்...**
பக்.03



**தமிழக தேர்தல் முடிவுகள் ஒரு பார்வை**
பக்.07

RIGHT PRICE
TRADE CASH & CARRY
((((( Many Opening Offers )))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

MIDDX TYRES LTD
NEW, PART WORN & REMOULDS MOT PREPERATIONS, STEERING
020 8813 91 54 / 84
EXHAUSTS, WHEELS, SUSPENSION, 4 WHEEL ALIGNMENTS, BRAKES
41 - 43 The Green, Southall, Middx
WWW.MIDDXTYRESLTD.COM



A1 Auto Centres
TYRES ALLOYS EXHAUSTS SHOCKS BATTERIES BRAKES SERVICING
State of the art 4 wheel electronic alignment
Alloy Wheels
Brake Pads
Come in for a winter check
Best Deal in Town
Powerflow Stainless Steel exhaust system for any car
Next to Morrisons 0208 204 6868
Bowman Trading Estate, West Morland Rd, NW9

TMC Wholesale
We gurrantee to beat all other wholesalers and cash & carry prices
Hardware, Stationery, Household, D.I.Y, Electrical, Kitchenware
1,000's of £1.00 lines in stock - strictly wholesale
Tel: 020 8803 5678 Fax: 020 8803 5656
Unit 5 H Nobel Road, Eley Estate, Edmonton, London, N18 3BH
Opening Hours: Mon - Fri 9.00am - 7pm Sun 9.00am - 2.00pm
E.mail: tmcwholesale@hotmail.com

BEJAY'S
ICE CREAM AND LOLLIPOPS
Discounted Ice Cream Walls, Nestle, Treats, Cadbury, Mars and Many OtherBrands
Delivered 7 Days A Week Resturant & Shop Etc
Wall's
61 - 65 GRANGEWOOD ST EASTHAM LONDON E6 1HB
TEL: 020 8471 9405
FAX: 020 8472 3406
WHOLESALE SUPPLIER FOR LEADING ICE CREAM MANUFACTURERS

R & J HEATING & PLUMBING TRADE LTD
BRISTAN HERITAGE ARMITAGE AQUALISA
Complete Bath Suite £199* Only
(Includes WC, Basin & Pedestal, Steel Bath, Mixer Taps, Bath Waste)
Many Other Special Offers In-store
Call us on 0208 538 7722
Address:
Unit 3, Derby Road Ind Estate
Derby Road, Hounslow
Middx, TW3 3UH
Tel: 0208 538 7722 / Fax: 0208 538 7733
*Price Includes VAT

lifestylemortgages
CAN'T GET A MORTGAGE?
POOR CREDIT HISTORY?
UNABLE TO PROVE INCOME?
[MORTGAGE OR RE-MORTGAGE]
YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE
NO MORTGAGE - NO FEE
Call : 020 8574 2008
The overall cost for comparison is : 6.0% APR
This is a typical rate that may vary depending on your personal circumstances
6A SOUTH ROAD, SOUTHALL UB1 1RT
9.00 - 9.00 MONDAY TO SATURDAY
FOR FRIENDLY ASSISTANCE AND A PERSONALISED ILLUSTRATION
A MAXIMUM FEE OF 1% OF ANY LOAN ARRANGED IS USUALLY CHARGED BY LIFESTYLE MORTGAGES

IDEAL GLAZING
WITH OVER 20 YEARS EXPERIENCE
Manufacturers & Installers of uPVC and Aluminium



FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green, Southall
Middlesex, UB2 4AN

பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை

உதயன்

உண்மை ! நடுநிலமை ! மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.
தொடர்புகளுக்கு :
UDHAYAN
P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 020 8279 0354

ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்:
த ஜெயபாலன்
செய்தி ஆய்வு:
ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்:
த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# தமிழ் வன்முறை

குரொய்டன் - வொன்ஸ்வேத் பகுதி அண்மைக் காலத்தில் தமிழ் இளைஞர்களின் வன்முறைப் பகுதியாக பொலிசாரால் அடையாளம் காணப்பட்டு உள்ளது. கடந்த சில வாரங்களில் பொலிசாரால் பதிவு செய்யப்பட்ட 21 வன்முறைச் சம்பவங்களில் 18 தமிழ் இளைஞர்கள் சம்பந்தப்பட்டது என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பெப்ரவரி 12ல் ரூற்றிங் பொலிஸ் நிலையத்திற்கு முன் இடம்பெற்ற சம்பவத்தில் சாமுரை வாள், கிரிக்கட் பட் ஆகியவற்றால் தாக்கப்பட்டதில் 24 வயதுடைய இளைஞருக்கு தலையிலும் கையிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பெப்ரவரி 16ல் ரூற்றிங் மிச்சம் றோட்டில் அமைந்துள்ள மக்டோனால்ட்சில் உணவருந்திக் கொண்டிருந்த 25 வயதுடைய இளைஞர் தாக்கப்பட்டுள்ளார். மார்ச் சம்பவத்தில் குரொய்டன் பெஸ்ட்பூட் கடையில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் வெட்டப்பட்டுள்ளார்.

# தமிழ் - சீக்கிய இளைஞர்கள் சவுத்தோலில் மோதல்

தமிழ் இளைஞர்களுக்கும் சீக்கிய இளைஞர்களுக்கும் இடையேயான மோதல் சம்பவம் மே முற்பகுதியில் சவுத்தோலில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இரு தமிழ் இளைஞர்கள் மோசமாக காயப்பட்டு உள்ளனர். சவுத்தோல் ஹொட்டல் ஒன்றின் முன்பாக நின்றிருந்த தமிழ் இளைஞர்களை சீக்கிய இளைஞர்கள் தாக்கி உள்ளனர். இத்தாக்குதலில் ஒரு இளைஞர் மோசமான வெட்டுக் காயத்துக்கு உள்ளானார். தாக்குதலை அடுத்து தப்பி ஓடிய மற்றுமொரு இளைஞர் முழங்காலில் கம்பி கிழித்ததால் மோசமான காயத்துக்கு உள்ளாகி உள்ளார். காயப்பட்டவர்கள் வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த இளைஞர்கள் எனத் தெரியவருகிறது.


# சொந்த சமூக வன்மறையில் சிறுபான்மையினங்கள்

லண்டனில் உள்ள சிறுபான்மையினங்கள் தங்களுக்குள் வளர்ந்துள்ள வன்முறையாளர்களால் தன்னழிவுக்கு உட்படுவதாக சிரேஸ்ட ஸ்கொட்லன்ட்யாட் அதிகாரி தெரிவிக்கிறார். லண்டனில் தமிழ் மக்கள் உட்பட்ட 22 இனங்களில் 170 வன்முறைக் குழுக்கள் இருப்பதாக பொலிசார் மதிப்பிடுகின்றனர்.

இவ்வன்முறைக் குழுக்கள் மீதான கட்டுப்பாடு தம்மிடம் இல்லையென்றும் பொலிசார் அச்சம் தெரிவித்துள்ளனர். அரசியல் வாதிகள் மேலதிக வளங்களை வழங்காத வரை இக்குழுக்களைக் கட்டப்படுத்துவது கடினமென அவ்வதிகாரி தெரிவித்தார்.

மேலும் தெற்காசிய சமூகங்களில் நடைபெறும் வன்முறைகள் பற்றிய சந்திப்பு மே8ல் நியூஹாமில் (படங்கள்) இடம்பெற்றது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் சமூகங்களிடையே காணப்படும் வன்முறைகள் பற்றி அதிகாரிகள் விளக்கினர். ஒப்ரேசன் கோடன் பற்றியும் அங்கு விளக்கமளிக்கப்பட்டது.

# MortgageLINK சர்ச்சையில்



வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த அருண்குணசேகரம் அருணாச்சலம் (படம்) என்பவர் MortgageLINK தன்னை ஏமாற்றி உள்ளதாகக் குற்றம்சாட்டி உள்ளார். தனக்கு உறுதியளித்தபடி மோர்கேஜ் பெற்றுத்தராமல் அதிகப்படியான கட்டணத்தை தன்னிடம் அறவிட்டதாக MortgageLINK பிரதேச ஆலோசகர் இந்திரலிங்கம் மீது குற்றம்சாட்டி உள்ளார் அருண்குணசேகரம். நிர்வாகக் கட்டணமாக ஒத்துக் கொள்ளப்பட்ட £295 பவுண்களுடன் £850 பவுண்களை மேலதிகமாக கெ இந்திரலிங்கம் அறவிட்டுள்ளார். இந்திரலிங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.


இது தொடர்பாக கெ இந்திரலிங்கத்துடன் மே 23,13:40 மணியளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அது பற்றிப் பேச மறுத்துவிட்டார். தன்னுடைய clint சம்பந்தப்பட்ட விடயத்தை தான் எம்முடன் கதைக்க முடியாது என்று குறிப்பிட்ட அவர் சம்பந்தப்பட்டவர் அப்பொயின்ற்மன்ற் மேக் பண்ணிவிட்டு தன்னுடன் பேசும்படி கூறினார். கடந்த 2004 ஆண்டு முதல் நீங்கள் சரியான முறையில் பதிலளிக்காததாலேயே அருண்குணசேகரம் எமது பத்திரிகையிடம் முறையிட்டார் என்று தெரிவித்த போதும் இந்திரலிங்கம் அவரை தன்னிடம் வந்து பேசுமாறு கூறினார்.

## சர்ச்சையின் பின்னணி:

குடும்பஸ்தரான அருண்குணசேகரம் (படம்) வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க முதல் வேண்டும் என்பதால் 2004 நடுப்பகுதியில் MortgageLINK ஆலோ சகர் கெ இந்திரலிங்கத்திடம் ஆலோசனை பெறச் சென்றுள்ளார். அங்கு வீட்டை வாங்கி விட்டால் சிறிது காலத்திலேயே அதனை வைத்து லோன் எடுக்கலாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளார் இந்திரலிங்கம். ஆனால் அருண்குணசேகரம் வீடு வாங்குவதற்கு எந்த பணமும் தன் கையிருப்பில் இல்லை என்பதை இந்திரலிங்கத்திடம் தெரியப்படுத்தினார். அதற்கு ஒரு மாற்று வழியைத் தெரிவித்த இந்திரலிங்கம் நூறுவீத மோர்க்கேஜ் பெற்றுத் தர முடியும் என்று உறுதியளித்துள்ளார். இந்த ஏற்பாட்டிற்கு அருண்குணசேகரமும் சம்மதித்தார்.






X3[redacted] Cash 500.00 28AUG04 0152 N 28

MR K INDRALINGAM

இந்திரலிங்கம் மோர்க்கேஜ் அலுவலை மேற்கொள்ள நிர்வாகக் கட்டணமாக 295 பவுண்களை அறவிட்டார். வீடும் பார்க்கப்பட்டது. வீட்டை மதிப்பிடுவதற்கான கட்டணம் 395 பவுண்கள் செலுத்தப்பட்டது. ஆனால் இந்திரலிங்கத்தால் நூறுவீத மோர்க்கேஜ் எடுக்க முடியவில்லை. 15,000 பவுண்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டது. அதற்கு லோன் எடுத்துத் தருவதாக இந்திரலிங்கம் தெரிவித்தார். லோனுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் பூர்த்தியாக்கப்பட்டு அருண்குணசேகரத்திடம் கையெழுத்துப் (தொடர்ச்சி 4ம் பக்கத்தில்)

# அரசியல் தஞ்சம் குடும்பங்களுக்கான பொதுமன்னிப்பு நீடிப்பு

அரசியல் தஞ்சம் கோரிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்பட்டு உள்ளது. பொதுமன்னிப்புக்கான தகுதியுடையவர்கள் இப்போதும் தமது விண்ணப்பத்தை உள் துறை அமைச்சிற்கு அனுப்பி வைக்க முடியும். இப்பொது மன்னிப்பின் கீழ் 16,870 குடும்பங்களைச் சேர்ந்த 50,000க்கும் மேற்பட்டவர்கள் நிரந்தர வதிவிட உரிமையைப் பெற்றுள்ளனர். இது 2004ல் உள்நாட்டமைச்சினால் அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்பின் கால நீடிப்பே. இது ஒரு புதிய அறிவிப்பல்ல. குடிவரவுச் சட்டத்துக்கு வெளியே இச்சலுகை அளிக்கப்படுவதனால் இச்சலுகையைப் பெறுவதில் குடிவரவு முடிவுகள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.




### அரசின் பொது மன்னிப்பு என்ன ?

குடிவரவு முடிவுகள் எப்படி இருந்தாலும் ஒக்டோபர் 2, 2000க்கு முன்னதாக அரசியல் தஞ்சம் கோரிய குடும்பத்தினருக்கு அதே திகதி யில் அல்லது 24 ஒக்ரோபர் 2003க்குள், 18 வயதுக்கு உட்பட்ட, ஒரு குழந்தையாவது இருந்தால் முழு குடும்ப அங்கத்தவருக்கும் நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படும்.

### யார் இச்சலுகையைப் பெறத் தகுதி உடையவர்கள்?

ஒக்ரோபர் 2, 2000க்கு முன் அகதித்தஞ்சம் கோரிய 2.10.2000ல் அல்லது 24.10.2003ல் 18 வயதுக்கு குறைந்த குழந்தையை உடைய குடும்பம்.

### யார் சலுகையைப் பெறத்தகுதி அற்றவர்கள் ?

அடையாள மோசடிகள் செய்து அகதித்தஞ்சம் கோரியவர்கள், 3ம் நாடுகளில் அகதித் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள், பாலி யல் குற்றங்கள் உட்பட குற்றசெயல்களில் ஈடுபட்டவர்கள், நீதிமன்ற தண்டனை பெற்றவர்கள், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள்.

HEMI'S PARTY SHOP
17, Station Parade, Northolt Rd,
South Harrow, HA2 8 HB
(Opposite Netto)
Tel : 020 8869 0355
Balloons, Helium Hire, Banners, Cakes, Photo Balloons, Balloon Decorating Service for any Occasion.

Business For Sale
Off-licences & Groceries
On Harrow Road, Wembley
5 Min to Wembley Stadium
Takings of £4000pw
Asking Price £60,000
Tel - 0208 900 9011
07958 030 599

SAGAR CERAMICS
TILES & BATHROOM
NEW STORE OPENING OFFER
ROCA. BRISTAN.GROHE. IDEAL STANDARD, TYWFORD.KUDOS
OPEN 7 DAYS A WEEK
49Pinner Road, Nort Harrow,Middx,HA2 6EQ
Tel : 02088631400
Mbl: 0790556675, Fax:02084242234
E:sagarceramics@btconnect.com

Restaurant FOR SALE
In Queensbury
90 Seats
Double shop
2 bed flat above
8 years renewable lease
rent £27,000 pa
160K ono
07890990640

# £20,000 சன்மானம்

## யோகராஜாவின் கொலையாளியை இனம் காட்டுங்கள் : மெற் பொலிஸ்



டக்ளஸ் யோகராஜாவின் கொலையாளியை இனம்காட்டி குற்றத்தை நிருபிக்க உதவ முன் வருபவர்களுக்கு £20,000 சன்மானம் வழங்கப்படும் என மெற்றோ பொலிட்டன் பொலிஸ் அறிவித்துள்ளது. கிங்ஸ்பறியைச் சேர்ந்த டக்ளஸ் யோகராஜா(27) சுட்டுக்கொல்லப்பட்டார். டிசம்பர் 11 இரவு 9:50 அளவில் இவரது உடல் குயின்ஸ்பறி றோட்டில் இருந்து பொலிசாரால் மீட்கப்பட்டது. வேலையற்று இருந்த டக்ளஸ் யோகராஜாவின் நெருங்கிய உறவு கள் இலங்கையிலேயே உள்ளனர்.

வெள்ளைநிற வான் 9:50 அளவில் சம்பவ இடத்தில் இருந்து சென்றுள்ளது. வெள்ளைநிற ரியூப் பொருத்தப்பட்ட இவ்வான் பற்றிய தகவல்களை பொலிசார் விசாரிக்கின்றனர். DCI Dave Cobb (Specialist Crime Directorate) இக்கொலை விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். இது பற்றி கருத்து வெளியிட்ட DI Ian Foster of the Specialist Crime Directorate " இவ்விசாரணையில் கொலையாளியை கண்டுபிடிப்பதற்கான தகவல்கள் யாரோ ஒருவருக்கு தெரியும். அவர்கள் முன் வந்து எங்களுக்கு அந்தத் தகவல்களை வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இது பற்றி தகவலளிக்க விரும்புவோர் க்ரைம் ஸ்ரொப்பர்ஸ்க்கு 0800 555 111 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். தம்மை வெளிப்படுத்தாமல் தமிழில் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் Tamil Hot-line: 0800 587 2935 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

படத்தில் காணாமல் போன சிறுவன் கஜந்தன் அண்ணாத்துரை. இவரைக் கண்டு பிடிப்பதில் உதவிய தனிநபர்கள் மற்றும் ஊடகங்களுக்கு பொலிசார் தமது நன்றியைத் தெரிவித்து உள்ளனர்.



## சவுத்தோலில் காணாமல் சென்ற தமிழ் சிறுவன் ஏழு மாத மர்மத்தின் பின் ரொட்ணத்தில்

காணமல் போன சிவன் ஏழு மாதங்களின் பின் கண்டு பிடிக்கப்பட்டான். செப்ரம்பர் 29 2005 முதல் கஜந்தன் அண்ணாத்துரை என்ற 14 வயதுச் சிறுவன் காணாமல் போயிருந்தார். ஏழு மாத தேடுதலின் பின் வடக்கு லண்டன் ரொட்னம் பகுதியில் Specialist Crime Directorate இவரை கண்டு பிடித்தது. கஜந்தன் தற்போது Social Service இன் பாதுகாப்பில் நலமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளதாக பொலிசார் உதயனுக்குத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் அளவில் பிரித்தானியாவில் தஞ்சம் கோரிய இச்சிறுவன் சவுத்தோலில் தனது மாமன், மாமியுடன் வசித்து வந்தார். சம்பவ தினம் தனது மைத்துனியை சவுத்தோல் நோத் பிறைமறி ஸ்கூலில் விட்டுவரச் சென்றபோதே இவர் காணாமற் போனார். கஜந்தனின் பெற்றோர் இன்னமும் இலங்கையிலேயே உள்ளனர். இவரது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டும் இருந்தது. பொலிசார் வெவ்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு இருந்தனர்.

மாமா, மாமி கஜந்தன் வோல்தம்ஸ்ரோ பகுதியில் காணப்பட்டதாக ஈஸ்ரருக்கு சற்று முன் கிடைத்த தகவல்களை National Missing Person's Help Line க்கு அறிவித்தனர். அவர்கள் அதனை பொலிசாருக்குத் தெரியப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து பொலிசார் அப்பகுதியில் தீவிர விசாரணைகளை நடத்தி ஏப்ரல் 20ல் கஜந்தனின் முகவரியை கண்டு பிடித்தனர்.

கஜந்தன் தனது முடிவிலேயே வீட்டை விட்டு ஓடி இவ்வளவு பெரும் தேடுதலுக்கு காரணமானதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர் காணாமற் சென்றதில் யாருக்கும் தொடர்பு இருப்பதாக அவர்கள் சந்தேகிக்கவில்லை. கஜந்தன் வீட்டை விட்டு ஓடியதற்கான காரணத்தை பொலிசார் வெளியிடவில்லை. அவர் யாருடன் தங்கி இருந்தார் என்றோ அடைக்கலம் கொடுத்தவர்கள் ஏன் பொலிசாருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றோ பொலிசார் எந்த தகவலையும் வெளியிடவில்லை.

கஜந்தன் காணாமல் சென்றதும் அவரைக் கண்டு பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் லண்டன் தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. பொலிசார் பல்லாயிரம் பவுண் செலவில் தேடுதலை மெற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

K SHAN BUILDERS
BUILDING CONTRACTORS
For your home needs:
Roofing, Extension, Flooring, Wiring, Plumbing, Central Heating, Carpentry, Brickwork, Driveways, Decorating, Painting, Kitchen and Bathroom Fitting
Contact K. Shan:
Tel: 020 8478 3587
Mob: 07949 703 431
Email: shalanda2003@yahoo.com



Sarna & Sons
Jewellers Limited



95 The Broadway, Southhall
Middlesex UB1 1LN
T: 020 8893 5520 / 5533
F: 020 8795 0824

MARKANDAN & UDDIN SOLICITORS
SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS
M. MARKANDAN LLB A. UDDIN LLB (Hons) MA.LLM PhD-RFL
• Last Will
• Power of Attorney
• Sponsorship Declarations
Contact:

| | |
|---|---|
| M MARKANDAN | 07956 386 576 |
| UDDIN | 07957 455 670 |
| KURUP | 07748 764 079 |
| GILBERT | 07946 318 470 |
| MAHENDRAN | 07881 650 472 |
| MATHU | 07830 285 634 |
| JASOKUMAR | 07961 996 482 |
| SONG | 07952 769 656 |
| SHIYAM | 07793 134 335 |

Markandan & Uddin Solicitors
Tamil House, 720 Romford Road, London, E12 6BT
Tel: 020 8514 8300 / 07830285 634
Fax: 020 8514 8381

LONDON CELLULAR
NOKIA AUTHORISED SERVICE CENTRE
1000 Mins
ANY TIME ANY NETWORK
One Off Payment £10
Tel: 020 8459 6914






+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards


Promet Technology Ltd.
Architectural and Structural Steelwork
Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

Hyundai's opened London...
...What a wise choice



HYUNDAI
HYUNDAI LONDON 020 8457 6660 Edgware Road, London, NW9 7BN www.hyundai.co.uk/HyundaiLondon

# பொலிசாரால் இன்னமும் தீர்க்கப்படாது உள்ள கொலை விசாரணைகள்




டக்ளஸ் யோகராஜா (27) (படம்), கேதீஸ்வரன் சண்முகநாதன் (29), பிரபாகரன் கிஷ்ணசாமி (22), சுப்பிரமணியம் சிவகுமார் (44) ஆகியோரது கொலைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே உள்ளது. இக்கொலைகளில் சுப்பிரமணியம் சிவகுமார் தவிர்ந்த ஏனைய கொலைகள் இளைஞர்களின் குழு வன்முறையால் ஏற்பட்டதாகவே பொலிசாரால் சந்தேகிக் கப்படுகிறது. சுப்பிரமணியம் சிவகுமாரது கொலை பற்றி பொலிசார் குறிப்பாக எதனையும் தெரிவிக்கவில்லை.



வல்வெட்டியைச் சேர்ந்த பிரபாகரன் கிருஷ்ணசாமி (22) 2005 யூன் 25ல் இல்பேர்ட்டில், குத்திக் கொலை செய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக பொலிசார் தீபன் என்று அழைக்கப்படும் சிறிநவதீபன் சிறிரங் கராஜா (24) என்பவரை கைது செய்ய உதவுபவர்களுக்கு £10,000 சன்மானம் வழங்கப்படும் என அறிவித்திருந்தனர்.

2004 ஒகஸ்ட் 30ல் கிங்ஸ்பறியில் படுகொலை செய்யப்பட்ட கேதீஸ்வரன் சண்முகநாதனின் (29) கொலையாளியை அடையாளம் காணவும், கைது செய்யவும், தண்டணையை பெற்றுக்கொடுக்கவும் உதவும் வகையில் தகவல் வழங்குபவர்களுக்கு £25,000 சன்மானம் வழங்கப்படும் என இக்கொலை தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் DI Peter Basnett (SCD) உதயனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.



வில்சன் ஹை றோட்டில் உள்ள அப்னா பசார் சுப்பர்மார்க்கற் உரிமையாளர் சுப்பிரமணியம் சிவகுமார் (44) இவ்வாண்டு ஜனவரி 5ல் தனது கடையிலேயே மர்மமான முறையில் கொல்லப்பட்டார். கடந்த 9 ஆண்டுகளாக இப்பகுதியில் வியாபாரத்தை மேற்கொண்டுவரும் குமார் என்று அழைக்கப்படும் சிவக்குமார் மூன்று குழந்தைகளின் தந்தையாவார். அதிகாலை யில் ஹக்னியில் உள்ள மரக்கறிச் சந்தைக்கு செல்வதற்காக இரவு 11 மணிக்கு கடையைப் பூட்டி விட்டு அங்கேயே தங்கி இருந்த சிவகுமார் இரவு 11 மணிக்குப் பின் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.



கடந்த ஆண்டு யூலையில் லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளுக்கு சற்று முன் அல்லது அதற்குப் பின் இடம்பெற்ற இப்படுகொலைகளே இன்னமும் தீர்க்கப்ப டாத நிலையில் உள்ளது. பொலிஸ் வழங்கள் பெருமளவில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையில் பயன்படுத்தப்படுவதால் இவ்விசாரணைகளுக்குத் தேவையான வளங்கள் வழங்கப்படாததாலேயே இவ்விசாரணைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என தமிழ் மக்கள் நம்புகின்றனர். இதனை மறுத்த பொலிஸ் அதிகாரிகள் குற்றவாளிகள் விரைவில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்கின்றனர்.

# வெளிநாட்டு கிரிமினல்களை வெளியேற்ற முயற்சி இலங்கை கிரிமினல்களை வெளியேற்றுவது இலகுவாகும் - கொமான்டர் கிச்கொக்



வெளிநாட்டு குற்றவாளி களை திருப்பி அனுப்பும் உள்துறை அமைச்சின் முயற்சி குற்றவாளிகளான தமிழ் இளைஞர்களைத் திருப்பி அனுப்புவதற்கும் உதவும் என கொமாண்டர் அல்பேட் கிச்கொக் தெரிவித்தார். கிச்கொக் மெற்றோ பொலிட்டன் பொலிஸின் கொமான்ட ராகவும் தமிழ் குற்றவியல் பிரிவுக்கு பொறுப்பாகவும் செயற்படுகிறார்.

1023 வெளிநாட்டு குற்றவா ளிகள் திருப்பி அனுப்புவது பற்றி முடிவெடுக்கப்படாமல் சிறையில் இருந்து வெளியே விடப்பட்ட விவகாரத்தில் உள்துறை அமைச்சர் சார்ள்ஸ் கிளார் மே 5ல் தூக்கப்பட்டது தெரிந்ததே. 2006 பெப்ரவரி கணக்கெடுப்பின் படி, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சிறைகளில் உள்ளவர்களில் 13 வீத மான 10,265 குற்றவாளிகள் வெளிநாட்டவர்கள்.

பாரிய குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற 7 தமிழ் குற்றவாளி இளைஞர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக பொலிஸ் தரப்பு மே முற்பகுதியில் உள்துறை அமைச்சு அலுவலர்களை சந்தித்தனர். குற்றவாளிகளின் உண்மையான அடையாளம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட முடியும். அது தொடர்பான விசாரணைகள் இலங்கையில் மேற்கொள்ளப்படுகிறது.

தஞ்சம்கோரிய இவ்விளைஞர்கள் இங்கு பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டதால் அவர்களது தண்டனைக் காலம் முடிய அவர்களைத் திருப்பி அனுப்ப பொலிசார் முயற்சிக்கின்றனர். ஆனால் உள்துறை அமைச்சின் Immigration and Nationality Directorate அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லையென பொலிஸ் தரப்பில் குற்றம்சாட்டப்படுகிறது.

நீதிமன்றங்கள் குற்றச் செயல்களைப் பொறுத்து தண்டனைக்குப் பின் குற்றவாளி திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை வழங்கும். அப்படி வழங்காத பட்சத்தில் குறைந்தது ஒரு வருடத்திற்கு குறையாத சிறைத் தண்டனை பெற்ற ஐரோப்பிய பொருளாதார எல்லைக்குள் வராதவர்களைத் திருப்பி அனுப்ப திட்டமிடப்படுகிறது.

திருப்பி அனுப்புவது தொடர்பாக முடிவெடுக்கும் போது குற்றத்தின் தன்மை, மீண்டும் குற்றம் செய்வதற்கான வாய்ப்பு, குற்றவாளிக்கு இந்த நாட்டுடனா இறுக்கம் என்பன கவனத்தில் எடுக்கப்படும். திருப்பி அனுப்பும் முடிவுக்கு எதிராக குற்றவாளி மேன்முறையீடு செய்யவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

திருப்பி அனுப்புவது பற்றி முடிவெடுக்கப்படாத குற்றவாளிகள் தண்டனை முடிவடைந்ததும் தடுப்பு முகாம்களில் வைக்கப்படுவார் கள். அவர்கள் திருப்பி அனுப்புவது பற்றிய முடிவுக்காக காத்திருப்பவர் களா-னால் கண்காணிப்புப் பட்டி கட்டப்பட்டு வெளியே விடப்படுவார்கள்.

## இலக்கியப் பரிமாற்றத்திற்கு மொழி பெயர்ப்புகள் அவசியம்

தமிழிலும் நோர்வேஜிய மொழியிலும் சமநிலை யில் தேர்ச்சி பெற்றுள்ள இளைஞர் ராஜ்கண்ணா (படம்) எதிர்காலத்தில் நோர்வேஜிய மொழி இலக்கியங்களை, நாட்டார் கதைகளை, கிராமிய இலக்கியங்களை தமிழுக்குக் கொண்டு வர முயற்சிசெய்ய வேண்டும் என ராஜ்கண்ணாவின் வண்ணமலர்கள் சிறுவர் நூல் பற்றி கருத்து வெளியிடப்பட்டு உள்ளது.

தமிழில் சிறுவர் இலக்கியம் படைக்க ஏராளமான படைப்பாளிகள் இருக்கிறார்கள். தாயகத்தில் இன்று ஏராளமான சிறுவர் இலக்கிய நூல்கள் செழுமையுடன் வெளிவருகின்றன. இந்நிலையில் ராஜ்கண்ணா போன்றவர்கள் தனக்கெயுரிய திற மைகளை பன்மொழித் திறமை களை அந்தப் பன்மொழிச் சூழலில் பெறக்கூடிய அனுபவங்களை உள்வாங்கித் தெளிவான மொழிபெயர்ப்பகளை தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என அக்கருத்துக்கள் விரிகின்றது.

அதே வேளை ஈழத்து நாட்டார் கதைகளை நோர்வேஜிய மொழியில் மொழிமாற்றம் செய்து. நோர்வேஜிய மொ ழிச் சிறுவர்களுக்கு ஈழம் பற்றியும், ஈழத்தமிழரின் இருப்பு பற்றியும் அவர்களின் தமிழ் மொழி யின் செழுமை பற்றியும் அறியச் செய்யலாம். வரலாற்றுத் தேவையான இந்தப் பணியை ராஜ்கண்ணா எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நல்வழிச் சிறுகதை நூல் வெளியீட்டு வைபவம் நோர்வே சிவசுப்பிரமணியப் பெருமான் ஆலயத்தில் இடம்பெற்றது. நைஜீரியாவில் பிறந்து வளர்ந்த ராஜ்கண்ணா ஏற்கனவே பிஞ்சு மனம் எனும் நூலை வெளியிட்டு இருந்தார். திருமதி நகுலாம்பிகை தனபாலசிங்கம் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

இந்நூலை விமர்சித்த கவிஞர் சின்னத்துரை உமைபாலன் இந்நூலில் உள்ள 10 சிறுகதைகளும் சிறுவர்களுக்கு மாத்திரம் ஆலோசனை கூறுவது மட்டுமல்லாமல் குழந்தைகள் மூலம் பெற்றோருக்கு ஆலோ-சனை கூறக்கூடிய முறையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டார். (ராஜ் கண்ணாவின் படம் 9ம் பக்கம்)

## 2ம் பக்கத் தொடர்ச்சி..... MortgageLINK சர்ச்சையில்


பெறுவதற்காக வழங்கப்பட்டது. அப்போது அருண்குணசேகரத்திற்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

15000 பவுண் லோனுக்கு 180 மாதங்களுக்கு 289.92 செலுத்தப்பட வேண்டும் என் அவ்வொப்பந்தம் தெரிவிக்கிறது. அதன்படி 15000 பவுண் லோனை செலுத்தி முடிக்க 52000 பவுண்கள் செலுத்த வேண்டி இருந்தது. இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது என அருண்குணசேகரம் மறுத்தார். இந்திரலிங்கம் தனக்கு தகுந்த ஆலோசனையை வழங்காமல் தன்னை ஏமாற்றுவதாக உணர்ந்த அருண்குணசேகரம் அவர் மூலம் வீடு வாங்கும் திட்டத்தையே கைவிட்டார்.

ஆனால் அதற்கிடையே நெஸ் அன்கோ என்ற சட்டத்தரணி வீடு வாங்குவது தொடர்பான சட்ட அலுவல்களை கவனிக்க இந்திரலிங்கத்தால் கேட்கப்பட்டார். இந்த நெஸ் அன்கோவிற்கு அவர்களது கட்டணம் 350 பவுண்கள் அருண்குணசேகரத்தால் செலுத்தப்பட்டது. மேலும் 500 பவுண்கள் இந்திரலிங்கம் கேட்டதன் பேரில் வங்கியில் போடப்பட்டது. இதனைத் திருப்பித் தருவதாகக் கூறிய இந்திரலிங்கம் இரண்டு ஆண்டுகள் ஆகும் நிலையிலும் அதனைத் திருப்பி வழங்கவில்லை.

(குறிப்பு: மேற்படி தகவல்கள் அருண்குணசேகரத்தால் ஆவணங்களாக எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. கெ இந்திரலிக்கத்திற்கு அவரது நிலைப்பாட்டைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோதும் அவர் இச்சர்ச்சை தொடர்பாக பதிலளிக்கவில்லை. அடுத்த இதழில் அவர் தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்பினால் உதயன் அதற்கு வாய்ப்பளிக்கும்.)

15,000 பவுண் லோனுக்கு நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அருகில் காண்கிறீர்கள்


CREDIT AGREEMENT REGULATED BY THE CONSUMER CREDIT ACT 1974
SECURED PERSONAL LOAN
CUSTOMER NO
CUSTOMER DETAILS (Please use block capitals and a ball point pen)
LOAN DETAILS AND PAYMENTS
15000.00
APR 20.1
289.92
180

1ம் பக்கத் தொடர்ச்சி

### உள்ளாட்சித் தேர்தல் : ஆறு தமிழ் கவுன்சிலர்கள் மீண்டும்...

தொழிற்கட்சியின் சார்பில் நியூகாம் கவுன்சிலுக்கு போல் சத்தியநேசன், ஹரோ கவுன்சிலுக்கு தயா இடைக்காடர், மனோகரன் தர்மராஜா, குரொய்டன் கவுன்சிலுக்கு மைக்கல் செல்வநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் லிபிரல் டெமொகிரட் கட்சியின் சார்பில் றோகன் அகிலன் யோகநாதன் கிங்ஸ்ரன் அப்ஒன் தேம்ஸ் கவன்சிலிலும் தொழிற்கட்சியின் சார்பில் சசிகலா ஹரோ கவுன்சிலிலும் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

மூன்றாவது தடவையாகவும் கவுன்சிலராகத் தெரிவு செய்யப்பட்ட போல் சத்தியநேசன் ஈஸ்ற்ஹாம் நோத் பகுதியில் போட்டியிட்டு நியூகாம் கவன்சிலிலேயே அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளார். இவர் பெற்ற வாக்குகள் 1939. தமிழ் கவுன்சிலர்களிடையே அதிகூடிய வாக்குகளைப் பெற்றதும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு வோல் என்ட் தொகுதியில் போட்டியிட்ட போதும் இவரே நியூகாமின் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை, நிரந்தர நண்பர்களும் இல்லை என்பது லண்டன் தமிழர்களின் அரசியலிலும் உண்மையாகி உள்ளது. 2001ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்ட சுரேஸ் கிருஷ்ணா, சுரேஸ் சசிகலா, தயா இடைக்காடர் ஆகியோருக்காக ரிபிசி ராம்ராஜ் கடுமையான தேர்தல் பிரச்சாரங்களைச் செய்து முதற் தடவையாக தயா இடைக்காடரை உள்ளாட்சி சபைக்கு அனுப்பி வைத்தார். படம்: சசிகலா, ராம்ராஜ், இடைக்காடர், சுரோஸ்.

# தெரிவு செய்யப்பட்ட கவுன்சிலர்கள்: சில குறிப்புகள்

பொதுவாகவே அரசியல் வாதிகள் பேச்சுத் திறனில் வல்லவர்கள் அதற்கு மேல் அவர்கள் சமூகத்திற்கு என்ன செய்துள்ளார்கள் அதனை எவ்வாறு மதிப்பிடுவது என்பது கடினமானதே தெரிவு செய்யப்பட்டவர்கள் பற்றி எமக்கு கிடைத்த தகவல்களை இங்கு தருகிறோம்.



எலிசா பாக்கியவதி மஅன்:
இலங்கையில் மனித உரிமைகளுக்காகவும் புனர்வாழ்வுக்காகவும் பணியாற்றுபவர். TR-TEC, TCHA, TRAG போன்ற தமிழ் அமைப்புகளின் உருவாக்கத்தில் பங்கெடுத்தவர். அவற்றின் உறுப்பினர்.




யோகன் யோகநாதன்:
கடந்த உள்ளாட்சி ஆட்சியில் மேயராக தெரிவு செய்யப்பட்டவர். Institute of Tamil Culture மற்றும் Ceylon Cricket League, Surrey Lankanians Cricket and social Club இன் உருவாக்கத்தில் ஈடுபட்டவர் அதன் தலைவராகவும் இருந்தவர். விளையாட்டு அபிவிருத்தியில் ஈடுபாடு கொண்டவர்.

றொஹான் அகிலன் யோகநாதன்:
சமத்துவம், பன்மைத்துவம் என்பவற்றை ஊக்குவிப்பவர். யோகன் யோகநாதனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



சசிகலா சுரேஸ்:
கலாச்சார நிகழ்வகளை ஒழுங்கு படுத்துவதில் ஈடுபட்டு வருபவர். சுனாமி மீள்கட்டுமானம் மற்றும் பாகிஸ்தான் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்.


மைக்கல் செல்வநாயகம்:
இளைஞர்கள் மத்தியில் உள்ள வன்முறைகளை கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டவர். தென் கிழக்கு லண்டனில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் தொடர்படையவர்.



மனோதர்மராஜா:
1998 முதல் கவுன்சிலராக இருந்து வருகிறார். சென்ற உள்ளாட்சி காலப்பகுதியில் கரோ கவுன்சிலின் மேயராக இருந்த பெருமை இவருக்கு உண்டு.

தயா இடைக்காடர்:
சுனாமி நிதி திரட்டலில் ஈடுபட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். தமிழ் பொலிஸ் ஆலோசனைக் குழு உறுப்பினர். ஈழபதிஸ்வரர் ஆலய எதிர்ப்பு போராட்டங்களில் ஈடபட்டுவருபவர்.

போல் சத்தியநேசன்:
அரச விருதுகளை வென்று Award Winning Councillor, A Modest Councillor என உள்ளுர் ஆங்கிலப் பத்திரிகைகளால் பாராட்டப்பட்டவர். கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தால் தனது சேவைக்காக கௌரவிக்கப்பட்டவர். லண்டனில் உள்ள பெரும்பாலான தமிழ் பொது அமைப்புகளின் உருவாக்கத்தில் பங்கெடுத்தவர் அல்லது அதன் உறப்பினராக இருந்தவர். இளைஞர்களின் வன்முறையை கட்டுப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு வருபவர். உதவி தேவைப்படுபவர்கள் ஈஸ்ற்ஹாம் வீதிகளில் இவரை வழிமறிக்கலாம்.



படம்: கவுன்சிலர் மைக்கல் செல்வநாயகம், கவுன்சிலர் போல் சத்தியநேசன், கவுன்சிலர் தயாஇடைக்காடர்

### தமிழர்கள் : போட்டியும் முடிவுகளும்

| கட்சி | போட்டி.எண் | வெற்றி.எண் |
|---|---|---|
| தொழிற்.க | 10 | 5 |
| லிபிரல் டெ.க | 05 | 3 |
| கொன்சவேடிவ்.க | 04 | 0 |
| சுயேட்சை | 04 | 0 |
| மொத்தம் | 23 | 8 |

# வெற்றியைத் தவறவிட்ட தமிழ் பிரபலங்கள்

என்றுமில்லாதவாற இந்த உள்ளாட்சி சபைத் தேர்தலில் 20க்கும் அதிகமான தமிழர்கள் போட்டியிட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஹரோ, நியூஹாம் கவுன்சில்களில் போட்டியிட்டனர். ஆனால் துரதிஸ்டவசமாக இருவரே மேலதிகமாக கவன்சிலர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். புதிதாக போட்டியிட்டவர்கள் பெரும்பாலும் தொழிற்கட்சியின் சார்பிலேயே களமிறங்கி இருந்தனர். தேசிய அளவில் மூன்று தடவைகள் தெரிவான தொழிற்கட்சி அண்மைக்காலமாக அரசியல் புயலிற்குள் சிக்கித் தவிக்கும் நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக உள்ளாட்சித் தேர்தலில் தொழிற்கட்சிக்கு பலத்த அடி விழும் என்பது எற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. அந்த அடி அக்கட்சியின் சார்பில் நின்ற பல புதுமுகங்களையும் தாக்கி உள்ளது.




கடந்த தேர்தலில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட தவத்துரை ஜெயரஞ்சன் (ரெட்பிறிஜ் கவுன்சில்) (படம்), கிருஸ்னா சுரேஸ் (ஹரோ கவன்சில்) மீண்டும் இந்த உள்ளாட்சித் தேர்தலிலும் தோல்வி அடைந்துள்ளனர். தவத்துரை ஜெயரஞ்சன் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு எதிராகவும் புலிகளின் தடையை நீக்கக் கோரியும் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர். வன்னிக்குச் சென்று செல்வாக்குப் பெற்றவர். தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதும் வெற்றியைத் தவறவிட்டார்.

லண்டன் பாபா என்று தீபம் தொலைக்காட்சியால் அறியப்பட்ட கிருஸ்ணா சுரேஸ் ஒரு திரைப்படத்திலும் கதாநாயகனாக நடித்திருந்தார். கடந்த தேர்தல் சுரேஸ் தனது மனைவி சசிகலாவுடனேயே களமிறங்கி இருந்தார். இருவருமே தோல்வியைச் சந்தித்தனர். இத்தடவையும் தம்பதிகளாகவே களத்தில் குதித்த சுரேஸ் - சசிகலா தம்பதிகளில் சசிகலா வெற்றியுடன்

தொடர்ச்சி 6ம் பக்கத்தில்

KENTON PARK SERVICE STATION
MR YOGESH JHALA
M.O.T & Service
■MOT While-U-Wait
■MOT Failures prepared for Re-test
■All types of Mechanical Work carried out
384 Kenton Rd, Harrow, HA3 9DP
Tel 020 8907 3111, 020 8907 1091

George Fraser - Dedicated to Quality Car Care Service
Specialists in Mercedes-Benz Service, Repairs, Bodywork and Electrics
Repair and exchange of automatic gearboxes
• 24 years experience
• Mercedes-Benz trained technicians
• Free delivery & collection
• Free MoT on major Services
• Official Mercedes-Benz Diagnostic on site
Call us now on
020 8795 1055
Wembley, Middlesex
MERCEDES-BENZ ENGINEERS

TYRE CHECK &
AUTO SPARES - ACCESSORIES
(BRITISH & FOREIGN CARS)
NEW & PART WORN TYRES | BATTERIES
WHEEL BALANCING | EXHAUST
WHEEL ALIGNMENT | BRAKES
NEW & SECOND HAND RIMS | SERVICE
SHOCK ABSORBERS | MOT WORK
OPEN SEVEN DAYS A WEEK
MON-SAT 8.30AM TO 7PM - SUN 9.00AM TO 6.00PM
368, HIGH ST NORTH, EASTHAM, LONDON, E12 6PH
TEL : 020 8586 0886
FAX : 020 8470 4745
MOBILE : 07956353774

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

Euro Auto Technik
We Specialise in Mercedes and BMW
Repairs, Servicing for all European and Japanese Vehicles
Call: Amarjit Sandhu on
020 8573 4555
Unit 2, Tudor Works
Beaconsfield Road, Hayes UB4 0SL

ALFARAMA
DEDICATED TO ALFA ROMEO SINCE 1971
Alfa Romeo
SERVICE CENTRE
SALES • SERVICE • PARTS • BODYSHOP
LOAN CARS • COLLECTION & DELIVERY
020-8951 4100
UNIT 5 • PARR ROAD • STANMORE • MIDDX. HA7 1NL

## போலித் திருமணங்களை முறியடிக்கும் புதிய விதி

# மனித உரிமைகளுக்கு மாறானது

போலித் திருமணங்களை முறியடிக்க கடந்த ஆண்டு பெப்ரவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறை மனித உரிமைகளுக்கு முரணாணது என நீதிபதி ஸ்ரீபன் சில்பர் தீர்ப்பளித்துள்ளார். அப்புதிய நடைமறையின் பிரகாரம் மணம் முடிப்பவரின் குடிவரவு எப்படி இருப்பினும் ஐரோப்பிய நாடுகளைச் சேராதவர்கள் பிரித்தானியாவில் மணம் முடிக்க இங்கு 6 மாத காலத்திற்கு தங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருக்காவிட்டால் உள்தறை அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும்.

இது பற்றித் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி இப்புதிய நடைமுறையை அறிமுகப்படத்தவதற்கான தேவை உள்துறை அமைச்சிற்கு ஏற்படவில்லை எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் சேர்ச் ஒப் இங்கிலண்டில் மணம் முடிக்க விரும்புபவர்களுக்கு இவ்வாறான தடைகள் இல்லை என்பதையும் அந்நீதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

2001 முதல் 2005 வரையான காலப்பகுதியில் திருமணப்பதிவாளர்களால் சந்தேகிக்கப்பட்ட திருமணங்களின் விபரம் கிழே தரப்பட்டுள்ளது. தகவல் : உள்தறை அமைச்சு

2001: 752, 2002: 1,205, 2003: 2,684, 2004: 3,578, 2005: 247

## மதப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் எதிர்ப்பு

மதப் பள்ளிகளுக்கு அரசு நிதி ஒதுக்குவதை நிறுத்தும்படி ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்து உள்ளனர். அரசாங்கம் மதப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்குவது அரச நிறுவனத்தில் மத அடிப்படைவாதம் வளர்வதற்கு வழிவகுப்பதாக அவர்கள் குற்றம்சாட்டி உள்ளனர். ஆசிரியர்களதும் விரிவுரையாளர்களதும் கூட்டமைப்பின் மாநாட்டிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இங்கிலாந்தில் 7000 மதப் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 600 இடை நிலைப் பாடசாலைகள்.


5ம் பக்கத் தொடர்ச்சி

## வெற்றியைத் தவறவிட்ட தமிழ் பிரபலங்கள்

மீண்டார். சுரேஸ் மீண்டும் தவறவிட்டுவிட்டார்.

வடக்கு கிழக்கு இலண்டன் தமிழர்களால் அறியப்பட்ட டொக்டர் நிக்கலஸ் பிள்ளை 23 வாக்குகளால் தனது வெற்றி வாய்ப்பை தவறவிட்டுள்ளார். தொழிற்கட்சி சார்பில் என்பீல்ட் கவுன்சிலில் போட்டியிட்ட இவர் தமிழர் விடுதலைக் கூட்டணி லண்டன் கிளையின் முக்கியஸ்தர் என்பது குறிப்பிடத்தக்கது. மனித உரிமைகள், அரசியல் பன்மைத்துவம் என்பவற்றுக்காக இவர் குரல்கொடுத்து வருபவர்.

கோபால் கோபிரட்ணம் (வலம்) ஒரு பேப்பர் ஆசிரியர், எஸ் கருணைலிங்கம் (இடம்) ரிரிஎன் இயக்குநர் இருவரும் ஹரோ



கவுன்சில் ஹெட்ஸ்ரொன் நோத்தில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தனர். இத்தடவை தோல்வியை எதிர்பார்த்த இவர்கள், அடுத்த தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்புள்ள பகுதியை கட்சி தரும் என்ற நம்பிக்கையிலேயே களத்தில் இறங்கியதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை விட தொழிற்கட்சி சார்பில் பிறன்ற் கவுன்சிலில் போட்டியிட்ட முன்னாள் நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் கனா நகீரதன் தோல்வியைத் தழுவியுள்ளார்.

இத்தேர்தலில் சுயேட்சையாக நின்ற எந்த தமிழ் வேட்பாளரும் வெற்றி பெறவில்லை. சுயேட்சையாக நியூஹாமில் போட்டியிட்ட பிரபாகரன், கிங்ஸ்ரனில் போட்டியிட்ட வைத்தீஸ்வரன் தயாளன், வொன்ஸ்வேத்தில் போட்டியிட்ட தமிழினி குலேந்திரன் ஆகியோர் தோல்வி அடைந்தனர்.


கொன்சவேடிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட எந்த தமிழ் வேட்பாளர்களும் வெற்றியடையவில்லை. தொழிற்கட்சியின் கோட்டையான நியூஹாமில் உள்ள வோல் என்ட் தொகுதியில் கொன்சவேடிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நடன ஆசிரியை விஜயாம்பிகை, ஞானசேகரன் ராஜ்குமார் ஆகியோர் தோல்வி அடைந்தனர். இதே வொல் என்ட் தொகதியிலேயே சுயேட்சையாக பிரபாகரனும் போட்டியிட்டார். கென்ற் பகுதியில் கொன்சவேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட பற்றிக் ரட்னராஜாவும் தோல்வி அடைந்தார். கொன்சவேடிவ் கட்சி எப்போதும் தான் தோல்வியைத் தழுவும் பகுதிகளிலெயே தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இத்தடவை இக்கட்சியில் ஒரு தமிழ் கவுன்சிலர்களும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

TRICO SHIPPING WORLDWIDE
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
Unit 4, Bitmer Place, Coburg Road, Wood Green
London N22 6TP

Jayesh Flowerist
Flowers for all Occasions..
Local - National - Worldwide
Delivery Service Avalable
Specialist in Wedding
& Funeral Flowers
FREE PHONE 0800 092 22 33
Open 7 Days
020 8459 2828
366 High Rd, Willesden,
NW10 2EA, London
Bye Online ....
www.jeyeshflowrist.com



Asian
Funeral
Care Ltd
*A personal tailored service to meet every induvidual religious cultural need at reasonable rates
*Private viewing and Service Hall
Tel :0208 909 3030
Mob:07970 934623




வீட்டில் ஏற்படும் வன்முறைகளுக்கு எதிராக மெற்றொ பொலிட்டன் பொலிசார் மேற்கொண்ட விழிப்புணர்வு மற்றும் எச்சரிக்கை நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று

# மனைவியை அடிப்பவர்கள் மன்னிப்புக் கேட்டால் விடுதலை

மனைவியை அடிக்கும் கணவர்கள் தமது குற்றத்தை ஏற்று மனவருத்தத்தைத் தெரிவித்தால் அவர்கள் சிறைத் தண்டனையில் இருந்து தப்ப புதிய நெறிமுறை வசதியளிக்கிறது. தண்டனைகளுக்கான நெறிமுறைகளை தீர்மானிக்கும் Sentencing Guidelines Council வழங்கிய சிபார்சிலேயெ இப்புதிய ஏற்பாடு சேர்க்கப்பட்டு உள்ளது. அதன் படி வீட்டு வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் உண்மையிலேயே மனவருத்தத்தைத் தெரிவித்தாலோ, தம்மை திருத்திக் கொண்டாலொ சேர்ந்து வாழ விரும்பினாலோ அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்க வேண்டியதில்லை என அக்குழு சிபார்சு செய்தள்ளது. இச்சிபார்சு தற்போது பா.உ க்களினதும் சட்ட நிபுணர்களினதும் ஆலோசணைக்கு விடப்பட்டுள்ளது. யூனில் உள்துறை அமைச்சர் ஜோன் ரீட் முன்னிலைக்கு கொண்டுவரப்படும்.

இப்புதிய சிபார்சு பற்றி பெண்கள் அமைப்புகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன. தங்கள் மனைவியரை அடிப்பதற்கு இப்புதிய விதி சிபார்சு செய்வதாக அவ்வமைப்புகள் குற்றம்சாட்டி உள்ளன. ஆண்டுக்கு 15 மில்லயன் குடும்ப வன்முறைகள் இடம்பெறுவதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. 16 - 69 வயதுக்கிடைப்பட்ட 26 வீதமான பெண்களும் 17 வீதமான ஆண்களும் குடும்ப வன்முறையை முகம் கொடுத்திருப்பதாக அவ்வாய்வு தெரிவிக்கிறது. இது பற்றி கருத்து வெளியிட்டுள்ள வுமன் எய்ட் நிறுவன பேச்சாளர், இங்கிலாந்து - வெல்ஸ் பகுதிகளில் வாரத்தில் இரு பெண்கள் தமது துணைவரால் அல்லது முன்னாள் துணைவரால் கொல்லப்படுவதாக தெரிவித்தார். வீட்டுவன்முறையில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க சில வேளைகளில் சிறைத் தண்டனை அவசியமாகிறது என அப்பேச்சாளர் தெரிவித்தார்.

# சைவமும் இந்தியக் கலையும் வரலாற்று ஆய்வு

பொன்னையா ஜெய அழகி எழுதிய The Thevaram contributiontoSaivismandIndian Music என்ற நூலின் வெளியீடு ஏப்ரல் 23ல் லண்டன், ரூட்டிங்கில் இடம்பெற்றது. லண்டன் ரத்தினம் நிறுவன நிறுவுநர் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் தொடக்கவுரை நிகழ்த்தினார். SOAS பல்கலைக்கழகத்தின் சமய வரலாற்றுத் துறை பீடத்தின் முன்னாள் தலைவரான பேராசிரியர் Humphrey Fisherம், அதே பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை முன்னாள் தலைவரும் தமிழ்ப் பேராசிரியருமான பேராசிரியர் ஜோன் மாரக்கும், திறனாய்வாளர் மு. நித்தியானந்தனும், பெரிய புராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரான வணக்கத்திற்குரிய Robin McGlashanம் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

# பெண்கள் அமைப்புகள் ஆத்திரம்




ஆண்டுக்கு 40 பாலியல் வல்லுறவாளர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதாக வெளிவந்த அறிக்கையை அடுத்து பெண்கள் அமைப்புகள் தமது விசனத்தை வெளியிட்டு உள்ளன. மேலும் 1994ல் 19 பேர் பாலி யல் வல்லுறவு தொடர்பாக பொலிசாரால் எச்சரிக்கப்பட்டனர். இது 2004ல் 40 உயர்ந்துள்ளது. 2004 ல் எச்சரிக்கப்பட்டவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டவர்கள் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு எச்சரிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இளவயதினரும் ஓய்வூதியம் எடுப்பவர்களும் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Rape Crisis ன் சார்பில் கருத்து வெளியிட்ட நிக்கொல் வெஸட்மார்லனட், பாலியல் வல்லுறவு ஒரு குற்றம் அது பாதிக்கப்பட்டவரில் ஆண்டுகளுக்கு ஏன் தசாப்தங்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார். இக்குற்றவாளிகள் தமது நாளாந்த வாழ்க்கையைத் தொடர்வதும், சிறைத் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதும் ஏற்றுக் கொள்ள முடியாதது என நிக்கொல் வெஸ்ட்மார்லன்ட் மேலும் தெரிவித்தார்.

றுத் ஹோல், Women Against Rape இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் பாலியல் வல்லுறவு கொண்ட பெரும்பாலான ஆண்கள் ஒரு தடவையுடன் அதனை நிறுத்துவதில்லை. அவர்கள் தொடர்ச்சியாக அதனைச் செய்பவர்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட குற்றத்தைச் சொல்ல வரும் பெரும்பாலான பெண்களின் முகத்தில் அடிப்பது போல் கதவைச் சாத்துவதே நடைமுறையாக உள்ளது எனக் குற்றம்சாட்டினார்.

பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகள் பெரும்பாலானவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உள்துறை அமைச்சு உறுதியளித்து உள்ளது. தற்போது பொலிஸில் பதிவு செய்யப்படும் பாலியல் வல்லுறவுக் குற்றங்களில் ஆறு சதவிதத்திற்கு குறைவானவையே தண்டனையை பெறுகின்றன.

விடியோ இணைப்பு மூலம் பாதிக்கப்பட்டவரின் நேர்முகம், காயங்களை காண்பிக்க அனுமதிக்கப்பட்டால் தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் வீதம் அதிகரிக்கும் என அமைச்சர்கள் கருதுகின்றனர். தற்போது 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கே விடியோ இணைப்பை சட்டம் அனுமதிக்கிறது.



# தமிழகத் தேர்தல் முடிவுகள் ஒரு பார்வை




மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட 13வது தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க கூட்டணி அதிக இடங்களைப் பெற்று தமிழகத்தின் முதல்வராக 5வது தடவையாக கருணாநிதி முதலமைச்சர் பதவியை ஏற்றார். அவருடன் மிகப்பெரும் அளவில் 31 பேர் கொண்ட அமைச்சர்களும் பதவியேற்றனர். தி.மு.க தனிப்பெரும்பாண்மை கிடைக்காத நிலையில் தனது கூட்டணி கட்சிகளை காங்கிரஸ், பா.ம.க, சி.பி.ஐ, சி.பி.எம் ஆதரவுடன் பதவியேற்றுள்ளது. கூட்டணி கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன.

கூட்டணி அமைக்கும் போதே தனக்கான இடங்களை குறைத்துக் கொண்ட தி.மு.க தனது கூட்டணி கட்சிகளுக்கு கணிசமான இடங்களை ஒதுக்கி தனத கூட்டணியை தக்கவைத்துக் கொண்டது. மேலும் தி.மு.க தனது தேர்தல் வாக்குறுதியில் ரூபாய் 2க்கு அரிசியை ரேசனில் வழங்கப்போவதாகவும் விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை ரத்து செய்வதாகவும் இலவச தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்போவதாகவும் மேலும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்றும் இன்னும் பல சலுகைகளை அறிவித்திருந்தது. முதல்வராக கருணாநிதி பதவியேற்றவுடன் கூட்டணிக்கட்சிகளின் முன்னணியில் அரிசியின் விலைக்குறைப்பையும் கூட்டுறவுகளில் பெற்ற விவசாயிகளின் கடனான 7000 கோடியை தள்ளுபடி செய்வதாகவும் கையொப்பம் இட்டுள்ளார். மேலும் அண்ணா மற்றும் பெரியார் பிறந்த தினங்களில் இலவச கலர் ரிவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவித்துள்ளார்.

மேலும் 2002ல் உச்சநிதி மன்றத்தில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அதற்கான அமைச்சரவை ஒப்புதலும் வழங்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளார். மேலும் மறைந்த நடிகர் சிவாஜிக்கு மணிமண்டபம் கட்டப்போவதாகவும் அதற்கான தயாரிப்பு பணி நடந்து வருவதாகவும் கூறியுள்ளார். ஜெயலலிதா ஆட்சியில் கடற்கரையில் அகற்றப்பட்ட கண்ணகிசிலை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இவரது அறிவிப்புகளை எவ்வாறு செயல்படுத்த போகிறார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். மத்தியில் சுமூகமான உறவை நீடிப்பதால் மத்திய ஒதுக்கீட்டில் இருந்து வழங்கப்படும் ரேசன் அரிசியின் விலையை குறைத்து ரூபாய் 2க்கு வழங்கப்படலாம் என கருத்து வெளியாகியுள்ளன.

தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான கூட்டணி படுதோல்வி அடைந்துள்ளது. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படுவோம் என அறிவித்துள்ள அதே வேளையில் சட்டமன்றத்துக்கு ஜெயலலிதா வரப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். தற்போதைய அரசை பொறுப்பேற்பவர்கள் காட்டுமிராண்டிகள் என்று அறிவித்துள்ளார். இனி விறுவிறுப்பான அரசியல் நடவடிக்கைகளை தமிழகத் தில் எதிர்பார்க்கலாம்.



ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவோ தனக்கு கொலைமிரட்டல் வந்துள்ளதாக அறிவித்து தனத இருப்பை வெளிப்படுத்தியுள்ளார். புதிதாக கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜயகாந் மக்களுக்கு சமூகப் பணி ஆற்றப்போவதாக அறிவித்துள்ளார். பெரும்பாண்மை இடங்களில் தனது கட்சி மூன்றாவது இடத்தில் வந்துள்ளமையால் தனது கட்சிக்கு அதிக செல்வாக்கு உள்ளதாகவும் அறிவித்துள்ளார். அனைத்து (234) தொகுதிகளில் போட்டியிட்டு இவர் மட்டுமே வெற்றிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திருமாவளவனுடைய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு 2 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. கடந்த முறை தேர்தலில் வெற்றிபெற்ற திருமாவளவன் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். இம்முறை ஜெயலலிதாவுடனான கூட்டில் 2 இடங்களை பெற்றுள்ளார்.

# லண்டன் கண்காட்சியில் இலங்கை புகைப்படங்கள்



சுனாமிக்குப் பின் எடுக்கப்பட்ட புகைப் படங்களின் கண்காட்சி ஏப்ரல் 4 முதல் 29 வரை இடம்பெற்றது. Rising from the waves என்ற தலைப்பில் இடம்பெற்ற இக்கண்காட்சி London International Gallery of Children's Art ல் இடம்பெற்றது.

சுனாமி: அன்றும் இன்றும் என்ற தலைப்பிலான புகைப்படக் கண்காட்சி ஜனவரி முதல் பெப்ரவரி வரை நடைபெற்றது தெரிந்ததே. ஒக்ஸ் பாம் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சியில் இலங்கை உட்பட சுனாமி யால் பாதிக்கப்பட்ட நாடுக ளில் இருந்து சுனாமியை தொடர்ந்து எடுக்கப்பட்ட படங்களும் அதே இடத்தில் ஓராண்டுக்கு பின் எடுக்கப்பட்ட படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்ட பல மில்லியன் மக்களை நினைவு கூரும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டதாக ஒக்ஸ்பாம் தெரிவித்திருந்தது.

London International Gallery of Children's Art ல் மே 3 முதல் யூன் 3 வரை Celebrating Human Values என்ற தலைப்பில் மற்றுமொரு புகைப்படக் கண்காட்சி இடம்பெற்று வருகிறது.

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

SAFEWAY SHOPFITTERS
Shop Front - Roller Shutter - Glass - Signs
Shop Shutters • Remote Control Garage Shutters • Van Shutters • Door Closers • Industrial Shutters • Door/Shutters Locks • Shutter Alterations
CHOICE OF ANY POWDER COATED COLOUR
SALES - SERVICE - REPAIR
LEICESTER - LONDON - BIRMINGHAM
FREE Estimates Tel Head office: 020 8843 2235 FREE Survey

Ellis & Co Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

iwfurniture.com
The Furniture Warehouse
For all your furnitures needs. sofas, dinning sets, beds + mattresses, desks, coffee tables, wardrobes + chests
0845 201 0746
wimbledon, Hayes and Perivale

B & B TIMBER & BUILDING MERCHANTS
For all your building and timber needs. Timber cut to size.
Open: MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

Popular Builders & Merchants
Specialist in:
Bath Shower, Shower Cubical, Jacuzzi, Steam Cabin, Vanity Units, Sanitary Ware, Wall Cladding, Plumbing, Building Material and DIY & Granite Floor Marble Tiles
020 8471 1677
293-295 High Street North, Manor Park, E12 6SL
popularbuilders@hotmail.com

Prestige Windows & Doors Ltd
Unbeatable prices & Quality
Call for free quote
Fensa Registered
T: 020 8503 4731
F: 020 8548 0466
156 - 158 KATHERINE ROAD EASTHAM LONDON E6 1ER
prestigewindows@hotmail.co.uk

Venus Double Glazing Co
(HOME IMPROVEMENT)
UPVC & Aluminium Replacement Windows, Patio Doors, Conservatories, Porches & Residential Doors
ESTABLISHED SINCE 1980
Showroom:
Unit 5, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middlesex HA0 1JW.
FENSA
Tel: 020 8998 7710

Woodstyle Kitchens & Bedrooms Ltd
Manufacturers of Superior Bedroom, Kitchen & Bathroom Units, Doors and Assessories
East London: Unit 4A R/O 328 Romford Road (via Palmerston Road) - Forest Gate London E7 8BS
Tel: 020 8519 0100
Fax: 020 8555 1513
Essex: Unit 3 Ash Industrial Estate - Merring Way - Flex Meadow - The Pinnacles - Harlow - Essex - CM19 5TJ
Tel: 01279 442100
Fax: 01279 442500
www.woodstyleuk.com

Panesar Electrical Co.
EST 1981
Wylex 9 Way Split Load - RCD+Main Switch - 9 MCBs ONLY £65
Lux 10 Way Split Load - RCD+Main Switch - 10 MCBs ONLY £55
More Quality Offers In Store
362 - 364 High Street, North Manor Park, London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

# UNBEATABLE PRICES

* TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE

MASSIVE SALE





MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm




## ‘Tamil Parents in Focus’

## தமிழ் பெற்றோர்களுக்கான வளர்ப்புமுறை

‘ரமிழ் பேரன்ஸ் இன் போக்கஸ்’ - ‘Tamil Parents in Focus’ என்ற வேலைத் திட்டத்தை தென் லண்டன் தமிழர் நலன்புரிக் குழு ஏற்பாடு செய்து வருகிறது. இந்த மூன்று ஆண்டுத் திட்டத்தின் இறுதிப் பயிற்சிப் பட்டறை நியூஹாமில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நியூஹாம் தமிழ் சமூக அமைப்பும் தென் லண்டன் தமிழர் நலன்புரிக் குழுவும் இணைந்து இந்த பயிற்சிப்பட்டறைகளை நியூஹாமில் ஏற்பாடு செய்யவுள்ளன.

பிரித்தானியாவிற்கு புலம்பெயர்ந்த முதற் தலைமுறை தமிழ் பெற்றோர்க்கும் பிரித்தானியாவிலே பிறந்த அல்லது சிறு வயதிலேயே பிரித்தானியாவிற்கு புலம்பெயர்ந்த பிள்ளைகளுக்கமிடையே ஏற்படும் முரண்பாடுகளை எவ்வாறு தவர்ப்பது, எப்படித் தீர்ப்பது, புரிந்து ணர்வை ஏற்படுத்துவது போன்ற விடயங்கள் இப்பயிசிப் பட்டறைகளில் கலந்துரையாடப்படும். இப்பயிற்சிப் பட்டறைகளில் பிள்ளைகளின் வளர்ப்பு முறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

## எட்ச்வெயர் காயத்திரி அம்மன் ஆலயத்தில்சித்திராப் பெளர்ணமி



எட்ச்வெயர் காயத்திரி அம்மன் ஆலயத்தில் சித்திராப் பெளர்ணமி விழா சிறப்பாக இடம்பெற்றது. 1001 லீற்றர் பால் கொண்டு பாலாபிசேகம் செய்யப்பட்டது. சிறப்புப் பூஜைகளும் இடம்பெற்றது. பன்மொழி பேசும் பக்தர்களும் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.



# தமிழ் நிலையத்தின் மதுரை மீனாட்சி நடனம்

சட்பறி வெம்பிளி பகுதியில் இயங்கிவரும் லண்டன் தமிழ் நிலையத்தினரின் மதுரை மீனாட்சி நாட்டிய நிகழ்ச்சி கடந்த ஏப்ரல் 22ம் திகதி லண்டன் லோகன் மண்டபத்தில் இடம்பெற்றது. ஆயிரத்துக்கு மேற்பட்ட இருக்கைகளை கொண்ட லோகன் மண்டபம் நிரம்பி இருந்தது. லண்டன் தமிழ் நிலையம் லண்டனில் முதலில் தொடங்கிய பாடசாலைகளில் ஒன்று. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக லண்டனில் லோகன் மண்டபத்தில் நடைபெற்றுவரும் இக்கலை நிகழ்ச்சி அதன் தரத்திற்கு பெயர் பெற்றது. சென்ற வருடம் பாடசாலையின் நிர்வாகத்தில் ஏற்பட்ட சில இழுபறிகள் சென்ற வருட நிகழ்ச்சியை மிகவும் பாதித்தது வாசகர்கள் அறிந்ததே.

இந்நாட்டிய நிகழ்ச்சியில் சங்கீதா சிவநேசன், கோபிகா சந்திரதேவா, லக்ஷ்மி சேனாதிராஜா, மற்றும் பிரசாந்தி சாந்தகுமார் ஆகியோர் முக்கிய பங்கேற்று வெகு சிறப்பாக நாட்டியம் ஆடினர். இதில் குறிப்பாக சங்கீதா சிவநேசனின் நடனம் பலராலும் பாராட்டப்பட்டது இந்நிகழ்ச்சியை திருமதி உமா சந்திரதேவா தலைமையிலான ஆசிரியர் குழு பயிற்றுவித்திருந்தது.

நடனத்தில் இருந்து சில காட்சிகளை இங்கு காண்கிறீர்கள்.
புகைப்படம் ரி கொன்ஸ்ரன்ரைன்.







# லண்டனில் நெக்ரர் அமைப்பின் ஒன்றுகூடல்

நெக்ரர் அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு ஏப்ரல் 15 லண்டனில் சிறப்பாக இடம்பெற்றது. 600க்கும் மேற்பட்ட அவ்வமைப்பின் ஆதரவாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

இந்நிகழ்வில் ஈரோஸ் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் மேற்கொண்டுவரும் புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்புத் திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. North East Central Tripartite Association for Reconstruction - NECTAR - நெக்ரர் என்ற அமைப்பின் பெயரிலேயே இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. 2004 டிசம்பரில் சுனா மி தாக்கியதைத் தொடர்ந்து சமூக மீள்கட்டுமானத்தில் ஈடுபட்டவர்கள் 2005ல் நெக்ரர் அமைப்பை உருவாக்கினர். பேராசிரியர் கணேசன் அதன் தலைவராகவும், வி குகனேந்திரன், எம் பாலாதாசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் உள்ளனர்.

கடந்த ஓராண்டு காலத்தில் நெக்ரர் பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டது. Micro Finance Project மைக்கிறோ பினான்ஸ் திட்டத்தின் மூலம் சிறிய அளவில் சுய தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு கடன் வழங்கப்பட்டது. இத்திட்டம் மூலம் திருமலையில் 500,000 ரூபாய் வழங்கப்பட்டது. உனிச்சக் குளம் பகுதியில் மாட்டுப் பண்ணைத் திட்டம் 43 மில்லியன் ரூபாய் முதலீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் திருமலையில் எ Information & Communication Technology Project ஆரம்பிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

அண்மையில் ஈரோஸ் அமைப்பு www.eelavarnet.org என்ற இணையத்தளம் ஒன்றையும் ஆரம்பித்து உள்ளது. நீண்ட ஓய்வுக்குப் பின் அவர்கள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளனர். இவ்விணையத்தளத்தில் அரசியல் விடயங்களிலும் அறிவியல் விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். புதிய அறிவியல் சமூகத்தை உருவாக்குவதே இவர்கள் நோக்கமாக உள்ளது.



படம் : ராஜ்கண்ணா

ஈழத்து நாட்டார் கதைகளை நோர்வேஜிய மொழியில் மொழிமாற்றம் செய்து. நோர்வேஜிய மொழிச் சிறுவர்களுக்கு ஈழம் பற்றியும், ஈழத்தமிழரின் இருப்பு பற்றியும் அவர்களின் தமிழ் மொழியின் செழுமை பற்றியும் அறியச் செய்யலாம். வரலாற்றுத்தேவையான இந்தப் பணியை ராஜ்கண்ணா எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும்

Ranji's Cakes Ltd
Freshly made egg & egg-less cakes
Deliveries and Last Minute orders
17 Village Way East, Rayners Lane, HA2 7LX
T:020 8868 7878
M:07946713311

HAVE A TASTIEST TREAT AT
Chandni Chowk
CHANDNI CHOWK
RESTAURANT & SWEETS
754/756 GREEN LANE
DAGENHAM ESSEX RM8 1YT
T: 0203 222 2000
106 THE BROADWAY
SOUTHALL, MIDDLESEX, UB1 1QF
T: 020 8867 7200

உங்கள் வர்த்தகத்தை மேம்படுத்த உதயனில் விளம்பரப்படுத்துங்கள்.


Mo's
Restaurant & Takeaway
Sri Lankan & South Indian Cuisine
Catering Undertaken for Weddings, Parties & Special Events
Open 7 Days a Week
11.30am-12 m'night
559 Kingsbury Road, Kingsbury NW9 9EL
Tel: 020 8204 7667
::Branch::
25 St. Johns Road, Wembley Middx. HA9 7HU
Tel: 020 8795 1254


FUNTASIA
Fancy Dress & Party Shop
Specialist in Party Goods
Established since 1984
229 Kenton Road, Kenton, Harrow HA3 0HD
Tel/Fax: 020 8907 1333
Email: funtasia@london.com
Web: www.funtasiaworld.com

KENTON
FOR QUALITY EDUCATION & PROGRESS
IN ENGLISH, MATHS & SCIENCE
KS 1, Ks2, Ks3, Ks4
11+ AND A LEVEL
CALL: 0208-909-2299
OR CALL AT:
UNIT 2, FITZGERALD HOUSE(REAR OF 182 KENTON ROAD)
ENTRANCE IN WILLOWCOURT AVENUE
KENTON, HARROW, HA3 8ES.

TUITION CENTRE

# மலிந்துவரும் நிர்வாகச் சீர்கேடுகள்



## NI Number ஐ பெறச்சென்றவரின் பாஸ் போட்டுக்கு நடந்த விபரீதம்


பிரான்ஸில் இருந்து லண்டனுக்கு வந்த தாமோதரம்பிள்ளை தருமராசா இங்குள்ள அரச நிறுவனங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கீழான நிர்வாக முறையினால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளார். ஒரு வேலை எடுப்பதற்கு வேண்டிய National Insurance number ஐ பெறுவதற்கு அவர் படாதபாடு பட வேண்டி இருந்தது. இது ஒரு தனிமனிதருக்கு நிகழ்ந்த விடயமல்ல. இவ்வாறான பல சம்பவங்கள் பலருக்கு இடம்பெற்றது. தருமராசாவுக்கு இடம்பெற்றது ஒரு உதாரணமே. அரசாங்கம் வேலைக்கு செல்வதை ஊக்குவிப்பதாக முழங்குகிறது. மறுபக்கம் கையில் வேலையை வைத்துக் கொண்டு அதற்கான ஆவணங்களை பெறுவதில் மிகுந்த சிரமங்களும் அலைச்சல்களும் ஏற்படுகிறது. பொது அமைப்புகளும் அதனை இலகுவாக்கி சரியான பாதையை காட்டுவதில் அக்கறைப்படாமல் அசமந்தமாகவே உள்ளன.

தருமராசா செப்ரம்பர் 10 2005ல் பிரான்சில் இருந்து லண்டனுக்கு வந்தார். பிரான்ஸ் நாட்டின் குடியுரிமை பெற்ற இவர் தனது நண்பருடன் Rochester என்ற இடத்தில் வசித்தார். நண்பர் வேலை செய்யும் Nestledoun தொழிற்சாலையில் நேர்முகத்திற்கு சென்ற போது National Insurance number மற்றும் bank details உம் கேட்டனர். National Insurance number ஐ எடுப்பதற்கான கடிதம் ஒன்றும் தருமராசாவி டம் வழங்கப்பட்டது. அதனை எடுத்துக்கொண்டு Maidstone வேலை வழங்கும் நிறுவனத்துக்கு சென்றார் தருமராசா.


அங்கு E Drew உம் அவருடன் தொழிற்பயிற்சிக்கு அமர்த்தப்பட்டிருக்கும் மேலும் ஒரு பெண்ணும் இணைந்து தருமராசாவை விசாரித்தனர். அவர்கள் கேட்ட அனைத்து ஆவணங்களையும் (கடவுச்சீட்டு அடையாள அட்டை உட்பட) தருமராசா அவர்களிடம் கொடுத்தார். கடவுச்சீட்டையும் அடையாள அட்டையையும் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றவர்கள் 45 நிமிடங்களின் பின்னர் வெளியே வந்து கடவுச்சீட்டையும் அடையாள அட்டையையும் தாங்கள் பரிசீலனை செய்துவிட்டு ஒரு வாரத்தில் அனுப்புவதாகக் கூறி உள்ளனர். ஆனால் அவர்கள் கூறியது போல் ஒரு வாரத்தில் அவை அனுப்பி வைக்கப்படவில்லை. போனில் E Drew உடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது பாஸ்போட்டை செக் பண்ண வேறு ஒரு இடத்துக்கு அனுப்பியுள்ளதாக கூறினார். அவை இன்னும் 2 நாட்களில் வந்துவிடும் என்றும் வந்தவுடன் அவற்றை எனக்கு அனுப்பிவைப்பதாகவும் கூறினார். ஆனால் 2 நாட்களின் பின்னும் அவை கிடைக்காததால் மீண்டும் போன் பண்ணினார் தருமராசா. அப்போது கோபமாக பேசிய அப்பெண் இப்படி அடிக்கடி போன் பண்ணினால் National Insurance number ஐ தரமாட்டோம் என எடுத்தெறிந்து பேசினார்.

அதன்பின் தருமராசா ஈஸ்ற்ஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசனுடன் தொடர்புகொண்டு எல்லாவற்றையும் கூறினார். கவுன்சிலர் E Drew உடன் கதைக்க போன் பண்ணிய போது பதிலளித்த அப்பெண் இன்னும் 2 வார காலத்தில் இரண்டையும் அனுப்ப முயல்வதாக கூறினார். 2 வாரத்தின் பின்னும் அவை கிடைக்காததால் தருமராசா மீண்டும் போன் பண்ணினார். அப்போது அந்தப் பெண் சுகயீன விடுமுறையில் இருப்பதாகவும் அவரின் லொக்கரில் அவைகளை வைத்து பூட்டியிருப்பதால் அப்பெண் மீண்டும் வேலைக்கு திரும்பியதும் அவற்றை அனுப்பி வைப்பதாகவும் கூறப்பட்டது. அதன் பின்னரும் நான் போன் பண்ணியபோது 7.12.05 அன்று என்னை வந்து அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு தருமராசாவுக்கு கூறப்பட்டது.

அன்றே அங்கு சென்று பாஸ்போட் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டேன். அதில் National Insurance number இருக்கவில்லை. National Insurance number இரு வாரங்களில் அனுப்புவதாகக் கூறிவிட்டு அவர் திரும்பிச்செல்ல முற்படுகையில் தருமராசா தனது பாஸ்போட்டை பிரித்துப் பார்த்தார். அது கிழிக்கப்பட்டு பழுதடைந்திருந்தது. கடவுச் சீட்டின் கோலத்தைக் கண்ட தருமராசா அதிர்ச்சி அடைந்தார். அதனை மீண்டும் எப்படி பயன்படுத்த முடியும் என்ற சிந்தனையே அவரிடம் ஓடியது. அவரது படம் ஒட்டப்பட்ட பக்கம் கிழிக்கப்பட்டு இருந்தது. அவரது மிக முக்கிய ஆவணம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. தருமராசா அதை அப்பெண்ணிடம் காட்டி இது எப்படி நடந்தது என்று விசாரித்தார். அதற்கு அப்பெண் உள்ளே சென்று உயரதிகாரி Chi Yau ஐ அழைத்து வந்தார். அவரிடம் நடந்த எல்லாவற்றையும் தருமராசா தனது நண்பர் மூலம் (தொலைபேசி ஊடாக) விபரமாக விளக்கிக் கூறவே அவர் எல்லாவற்றையும் விபரமாக எழுதிய பின் அதில் தருமராசாவும் அவ்வதிகாரியும் கையெழுத்திட்டனர். அதன் பிரதியொன்று தருமராசாவிடமும் வழங்கப்பட்டது.



இது தொடர்பாக ஈஸ்ற்ஹாமில் உள்ள தமிழ் சட்ட நிறுவனம் ஒன்றிடம் ஆலோசனை கேட்ட போது 'ஏயர்போட்டில் நீர் இதனைக் கொடுத்து பிடிபட்டால் தாம் மேற்கொண்டு செய்ய வேண்டியவற்றைச் செய்வோம்' எனத் தான்தோன்றித்தனமாகத் தெரிவித்து உள்ளனர். இவர்களை நம்பிப் பயனில்லை என்ற நிலையில் தருமராசா தானே நடவடிக்கையில் இறங்கினார்.




இவ்விடயம் தொடர்பாக ஈஸ்ற்ஹாம் பொலிஸிடம் 10.12.05 அன்று முறையீடு செய்யப்பட்டது. மீண்டும் அவர்கள் உறுதியளித்தபடி இரு வாரங்களின் பின்னும் NI number வந்து சேராததால் Commitelink அலுவலகத்துக்குச் சென்று விடயத்தை தெரிவித்த போது அவர்கள் தொழில் வழங்குவதாக கூறினர்.

தனது பாஸ்போட்டை பழுதாக்கியதால் தான் பல பிரச்சனைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளேன் எனத் தெரிவித்த தருமராசா "எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் என்னை மிகவும் வேதனைப்படுத்தி விட்டது. இதனால் நான் பிரான்ஸ் தூதரகம், ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமைகள் அமைப்பு, பிரித்தானிய நிர்வாகத்தினர் மற்றும் Jop Centre Plus Kent எல்லாவற்றுக்கும் எனக்கு நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் பற்றி கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன்" என்று விரக்தியுடன் உதயனிடம் முறையிட்டார். அவர் மேலும் கூறுகையில் "எனக்கு நேர்ந்த அநீதியால் கடந்த 5 மாதமாக எந்த வேலையுமில்லாமல் வருவாயுமில்லாமல் மிகவும் பொருளாதாரக் கஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளேன்" எனத் தெரிவித்தார்.



## ஜனாவின் ஓவிய நூல்

ஜனா மனுவேற்பிள்ளையின் Chennai Excite: New Work from South India ஓவிய நூல் ஏப்பிரலில் வெளியிடப்பட்டது. இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களில் இருந்து சற்று மாறுபட்ட ஜனா வழமையான மருத்துவம், பொறியியல், கணக்கியல் துறைகளில் இருந்து விலகி அழகியல் வரலாற்றிலும் ஆங்கில இலக்கியத்திலும் பட்டம் பெற்றுள்ளார்.

அழகியலுடன் நிதி முகாமைத்துவத்திலும் சந்தைப் படுத்தலிலும் தேர்ச்சி பெற்ற இவர் ஓவியர்களுக்கான அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். சென்னை சென்றிருந்த ஜனா ஓவியர்கள் நிலையான வேலையற்று புறம் தள்ளப்பட்ட நிலை மாறி அவர்கள் அழகியலின் புனிதர்கள் ஆகின்றனர் என்கிறார். சந்தேகமின்றி இந்தியாவில் ஓவியர்கள் பல அயிரம் ஆண்டுகளுக்கு முன் தமக்கிருந்த அந்தஸ்தை மீண்டும் பெறுவார்கள் என்ற நம்பிக்கையை அவர் தன் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் தென்னிந்திய ஓவியர்களின் ஓவியங்களையும் அவை பற்றிய குறிப்புகளையும், ஓவியர்கள் பற்றிய குறிப்புகளையும் கொண்டுள்ளது.

ஆக்கங்களை, செய்திகளை அனுப்பி வைப்பவர்கள் தங்கள் தொடர்பு இலக்கங்களை குறிப்பிடுவது மிக அவசியம். அவையில்லாதவிடத்து அவற்றை பிரசுரிக்க முடியாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

# நினைவலைகள்: முல்லையூரான்

- என் செல்வராஜா -

ஈழத்துத் தமிழ் இலக்கியப்பரப்பில் தரமானதொரு கவிஞராகவும், சிறுகதை எழத்தாளராகவும் திகழ்ந்த முல்லையூரான் என்று அறியப்பட்டவரான முருகேசு சிவராஜா அவர்கள் ஏப்ரல் 21 2006 அன்று டென்மார்க்கில் காலமானார். 1955ம் ஆண்டு மார்ச் 27இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளையில் பிறந்தவர் இவர். முருகேசு, சிவபாக்கியம் ஆகியோரின் மகனான முல்லையூரான் தனது ஆரம்பக் கல்வியை வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பெற்றுக்கொண்டார். பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, றிபேக் கல்லூரி ஆகியவற்றில் உயர்கல்வியைப் பெற்றுப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்டு மலையகத்தின் பண்டாரவளையில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

பல்கலைக்கழக வாழ்விலேயே இள்ம் கவிஞராக இனம் காணப்பட்ட முல்லையூரான், 1981இல் என் சித்தப்பா என்ற முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டுத் தன்னை ஈழத்தின் கவிஞர்களிடையே இனம்காட்டிக்கொண்டார். மறுஆண்டில் ஓகஸ்ட் 1982இல் போர்க்காற்று என்ற இவரது மற்றொரு கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. ஈழ விடுதலைப்போரின் ஆரம்பகாலச் சுவடுகளைப் பதியம் வைத்துள்ள கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

1984இல் தாயகத்தை விட்டுப் பிரிந்த இவர் சிலகாலம் தமிழகத்தில் தங்கியிருந்துள்ளார். தமிழகத்தில் இவருக்கு ஏற்பட்ட இலக்கியத் தொடர்பினால் 1986இல் ஈழம் எழுந்து வருகின்றது என்ற நாவலை முல்லைத்தீவான் என்ற பெயரில் தமிழகத்தில் ஈழசூரியன் வெளியீட்டு மையம் என்ற வெளியீட்டகத்தின் வாயிலாக வெளியிட்டிருந்தார். மேலும் இவரது குங்குமம் என்ற நாவல் தமிழகத்தின் சோமு புத்தக நிலையத்தினாலும், புதிய அலைகள் என்ற நாவல் ஸ்ரீ மீனாட்சி நிலையம் என்ற நிறுவனத்தின் வாயிலாகவும் இக்காலகட்டத்தில் வெளியிடப்பட்டன. பின்னர் அங்கிருந்து புலம்பெயர்ந்து வந்து 1986இலிருந்து டென்மார்க் நாட்டில் தனது குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்தார். டென்மார்க்கிலிருந்து 1993இல் நிர்வாண விழிகள் என்னும் கவிதைத் தொகுப்பினை ரூளி பதிப்பகம் என்ற தனது பதிப்பகத்தின் வாயிலாக முல்லையூரான் வெளியிட்டுள்ளார்.

டென்மார்க்கிலிருந்து காகம் என்ற கலை இலக்கியச் சஞ்சிகையையும் இவர் வெளிக் கொண்டுவந்திருந்தார். காகம் ஜனவரி 1995இலிருந்து மாத இதழாக வெளிவந்து ஜனவரி 1996இல் தனது 13ஆவது இதழுடன் நின்றிருந்தது. காகம் சஞ்சிகையில் தோப்புக்கரணங்கள் என்ற குறுநாவலொன்று இவரால் தொடர்ந்து எழுதப்பட்டிருந்தது. அத்துடன் சரியாசனம் என்ற நெடுங்கதையையும் இவர் காகம் சஞ்சிகையில் எழுதிவந்திருந்தார். இவை தனிநூலாக இன்னும் வெளிவரவில்லை.

ஆகாயவெளி என்ற குறுநாவல், அடைக்கலம் குருவி என்ற நெடுங்கதை, குடியிருந்த வளவு என்ற மற்றொரு நாவல், என் பின் பிறந்தவர்களுக்கு என்ற கவிதைத் தொகுதிகள் வெளிவரவிருப்பதாக ஒரு நூலில் குறிப்பிடப்பட்டிருந்ததை நூற்காப்பாளர் முல்லை அமுதன் என்னிடம் சுட்டிக்காட்டினார். இந்நூல்கள் பின்னாளில் வெளிவந்தமை பற்றிய தகவல்களை உடனடியாகப் பெறமுடியாதுள்ளது.

இறுதியாக இவர் எழுதிய சேலை என்ற சிறுகதைத் தொகுப்பு மல்லிகைப் பந்தல் வெளியீடாக. அமரர் புலோலியூர் சதாசிவம் அவர்களின் முன்னரையுடன் 2002இல் வெளிவந்திருந்தது. அமரர் புலோலியூர் சதாசிவம் அவர்கள் முல்லையூரானின் படைப்புக்கள் பற்றிக் குறிப்பிடும்போது, "புலம்பெயர் எழுத்தாளர்கள் தாங்கள் பெற்ற புதிய அனுபவங்களின் ஒளியில் தாயகத்தைப் பின்நோக்கி மீளாய்வு செய்யும்போது தாயக சமூகத்தின் பெறுமானம், இருப்பு, உட்கட்டமைப்பு, ஆகியவற்றைப் புதிய கோணத்தில் பார்க்கிறார்கள். இந்த வரவு எமது இலக்கியத்திற்கு புதிய நோக்காக சோபை தருகின்றது. இதனை முல்லையூரானின் படைப்புக்களில் தெளிவாகக் காணமுடிகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கரவைதாசனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு டென்மார்க் ஒல்போ தமிழ் வானொலி, தமிழ்ச் சேவை வெளியீடாக வான்பதி: 1வது ஆண்டு மலர் ஒன்று ஜனவரி 2002 இல் வெளிவந்திருந்தது. அதில் புலம்பெயர் தமிழ் வாழ்வும் அதில் ஊடகங்களின் செல்வாக்கும் என்ற கட்டுரையொன்று முல்லையூரான் அவர்களால் எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


## பிபிசியும் இலங்கைச் செய்திகளும்

- பொ சிவக்குமார்

பிபிசி இலங்கையைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை மக்கள் கவனத்தில் கொள்கிறார்கள் என பிபிசி தெற்காசியப் பிரிவு ஆசிரியர் பேர்னாட் கபோனி தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் எப்படித்தான் ஆதாரபூர்வமாக நடுநிலையாக செய்தி வழங்கினாலும் ஏதாவது ஒரு தரப்பு பிபிசி பக்க சார்பாக இயங்குவதாகக் குற்றம்சாட்டும் என்றும் தெரிவித்தார். பிபிசி யின் இலங்கை நிலவரங்கள் பற்றிய செய்திகளுக்கு வரும் விமர்சனங்கள், இவ்விரு விடயங்களைத் தெளிவாக்குவதாக பிபிசி தெற்காசியப் பிரிவு ஆசிரியர் பேர்னாட் கபோனி தெரிவித்தார்.


அண்மையில் பிபிசி யின் செய்திகளுக்கு கண்டனம் தெரிவித்து சிங்கள அமைப்புகள் சில போராட்டம் நடத்தினர். வி.பு க்கு சார்பான சில இணையத் தளங்கள் பிபிசி இலங்கையில் வாழும் தமிழர்களின் செய்திகளை இருட்டடிப்புச் செய்வதாகவும் அரச சார்பு செய்திகளையெ வெளியிடுவதாகவும் குற்றம்சாட்டின. இவற்றுக்கு பதிலளிக்கையிலெயே பேர்னாட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




# பிரித்தானியாவில் புகலிட நிலை

## ஐயா சேதி என்ன? ஓரம் போக்கியார்



கிரி: ஐயா! என்ன போன மாதம் லண்டனில் ஆயிரக்கணக்கில தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டம் செய்தார்களாமே?

முரளி: எல்லாம் திருப்பி அனுப்புறதப் பற்றித்தான். மரத்திலேருந்து விழுந்தவனை மாடேறி மிதிச்ச மாதிரில்ல இருக்கு. இப்ப என்னெண்டு அகதிகள் திரும்பிப் போறது? சண்டை தொடங்கினாலும் தொடங்குமென்று கதைக்கினம். அங்க பிள்ளைகள் படிப்பு, வீடு வாசல் எப்படியிருக்கோ தெரியாது; வேலைவெட்டி இல்லை. மருத்துவ வசதி இல்லை; சனம் இன்னும் சரியாகக் கஸ்ட்டப்படுதுகள். ஒவ்வொரு நாளும் கொலைகள் நடக்குது; இன்னும் அரஸ்ட் பண்ணிறாங்களாம். இதென்ன திருப்பியனுப்பிற கதை!

சிறி: ஏன் ஒப்பாரி வைக்கிறீர்? சைமன் கியூஸ் எம்பி அண்டைக்கு சொன்னதை முதல் செய்வம். இங்க இலக்சன் வருகுது. வோட்டுக் கேட்டு வார கவுன்சிலர் மாரிட்டை இலங்கை நிலவரங்களை எடுத்துக்கூறி, திருப்பி அனுப்புவது சம்பந்தமாக பிரித்தானிய அரசின் கடும்போக்கு நிலையை மாற்றக் கோருவம்.

கிரி: எல்லாம் செய்து பார்த்தாச்சு. ஆர்ப்பாட்டம், பெட்டிசன் குடுக்கிறது, எம்பி மாரைச் சந்திக்கிறது, உண்ணாவிரதம், ஏன் எயர்ப்போட்டில உரிஞ்சு போட்டுக்கூட ஆர்ப்பாட்டம் செய்ய இல்லையா. இன்னுந்தான் அனுப்பிக்கொண்டு இருக்கிறாங்கள். ஒருத்தருக்கும் தெரியாமலும் பிடித்து அனுப்பிறாங்கள். நீங்க என்ன ஐயா சொல்லுறீங்கள்?

கணேஸ்: இந்தச் சொலிசிட்டர்மார் செய்யிறது இன்னும் கொடுமை. அதுவும் அகதிகளாக வந்த எங்கட சொலிசிட்டர்மார்!

ஓரம்போகியார்: தஞ்சமென்பது ஒரு சிக்கலான விடயம். இலங்கை அரசியல், பிரித்தானிய அரசியல், உலக நாடுகளின் கூட்டரசியல் போன்றவற்றுடன் பின்னிப் பிணைந்தது. அரசியல் நிலைப்பாடுகளை அறிந்து, தகுந்த ஆலோசனைகளுடன், முடிவுகளை எடுக்க வேண்டும். அரசியல் நிலைகள், கொள்கைகள் மாறக் கூடியன; மாற்றவும் கூடியன. அகதிகளின் அக்கறை இங்கு முக்கியம்.

கிரி: விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா!

ஓரம்: முன்னைய உள்நாட்டு விவகார அமைச்சர், டேவிட் பிளங்கற், 2002 பெப்ரவரி மாதம், "பாதுகாப்பான எல்லைகள், பாதுகாப்பான புகலிடம்: நவீன பிரித்தானியாவில் ஒருமைப்பாடும் பல்வகைமையும்", எனும் கொள்கை ஆவணத்தின் முன்னுரையில் இப்படிக் கூறியிருக்கிறார்:

அவருடைய இந்த வார்த்தைகள்தான், அரசியல் தஞ்சம் தொடர்பான விடயங்களில் பிரித்தானியாவின் கொள்கையாக அமைகின்றன.

சிறி: இதனால்தான் இப்ப விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு உடன திருப்பி அனுப்புறாங்க. அகதிகள் வாரதும் குறைந்திட்டுது.

கணேஸ்: இப்ப வர ஏலாது; வந்தாலும் சொலிசிட்டர்மாருக்கு உழைத்துக் கொடுக்கிறதாகத்தான் முடியும். உழைத்துக் கொடுத்திட்டுப் போக வேண்டியதுதான். இல்லையெண்டாலும் கட்டாயப்படுத்தி அனுப்புவாங்கள்.

ஓரம்: அப்படி முடிவெடுத்து வாளாவிருப்பது தவறு. தனது சொந்த மண்ணிலிருந்து, வன்முறைத் துன்புறுத்தல்கள், அரசியல் அடக்குமுறை, அநீதி போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, அந்நாட்டின் பாதுகாப்பைப் பெறமுடியாத நிலையில், பாதுகாப்பை நாடி, பாதுகாப்பான நாட்டுக்குத் தஞ்சம் கோரி வருபவர்தான் அகதி என்பவர். அவருக்கு ஐ.நா. அகதிகள் ஒப்பந்தமரபின் கீழ், அகதி அந்தஸ்துக் கோர உரிமையுண்டு. தஞ்சக் கோரிக்கையாளர்களைச் சரியான முறையில் விசாரித்து, தகுந்த பாதுகாப்பு, உடல்நல வசதி, கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை பிரித்தானிய அரசுக்கு உண்டு.

கிரி: சோதிக்கு திரும்பிப் போக டேட் குடுத்தாச்சு; குலத்துக்கு பாஸ்போர்ட் எடுக்கச் சொல்லியாச்சு; குஞ்சனை கையெழுத்துப்போட வரட்டாம். சொலிசிட்டர் அட்வைஸ் என்ன தெரியுமா? "பாஸ்போட் எடாதை; ஓடி ஒளி; என்னோட இனி தொடர்பு கொள்ளாதையும்; இப்ப டெலிபோனையும் செக் பண்றாங்கள்; பிடிபட்டீரோ, எனக்குத் தெரியாது. எஸ்கேப்!".

கணேஸ்: இதுதான் சொல்லுறது. ஆர்ப்பாட்டங்களை சொலிசிட்டர்மார் கந்தோருகளுக்கு முன்னாலதான் முதல் வைக்க வேண்டுமெண்டு.

கிரி: அகதிகளுக்கு நாங்கள் என்ன செய்யலாம்?

ஓரம்: சமகால அரசியல் நிலைகளுக்கு ஊடாகத்தான் அகதிப் பிரச்சனையை நாங்கள் அணுக வேண்டும். இதில் சட்டத்தரணிகளினது பொறுப்பான பங்கு முக்கியம். அதேபோல, சமூக ஸ்தாபனங்கள், அகதி நிறுவனங்கள், அகதி ஆய்வாளர்கள், மனித உரிமை ஸ்தாபனங்கள், ஆதரவளிக்கக்கூடிய ஊடகவியலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், போன்றோரது பங்கும் ஒத்துழைப்பும் மிக அவசியம். இதைவிட அதிமுக்கியம் அகதிகளின் நேரடிப் பங்களிப்பு.

கிரி: சமகால அரசியல் நிலமைகளைப் பார்த்தால் அகதிகளாக வரும் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிற மாதிரி இருக்குது.

சிறி: உள்நாட்டு இலாக்காவின்ரை பெப்ரவரி மாத அறிக்கை, அகதிகளாக வாரவங்கட தொகை, கடந்த 10 வருடங்களோட ஒப்பிடக்க அதி வீழ்ச்சி அடைந்திருப்பதாகக் கூறுகிறது. ஆனால் அரசோ இன்னும் தங்கட இலக்கை அடையவில்லையாம். இன்னும் குறைக்க வேணுமாம்.

ஓரம்: இதனை அடைய அரசு பல்வேறு வழிகளைக் கையாள்கின்றது – புதிய தஞ்சச் சட்டங்களை அமுல்படுத்தல்; ஐ.நா. அகதிகள் ஒப்பந்த மரபின் (1951 Convention on Refugees) கீழான குறுகிய வரைவிலக்கணத்தினுள் அடங்காதோரின் கோரிக்கைகளை 'ஆதாரமற்ற' விண்ணப்பங்களென நிராகரித்து, துரிதமாகக் கையாளும் முறைகளைக் கையாண்டு திருப்பி அனுப்புதல்; தடுப்புக்காவலில் வைத்தல்; தகுந்த சட்ட உதவிகளைப் பெறுவதற்கான கால அவகாசம் வழங்காது திருப்பி அனுப்புதல்; வழக்குகள் முடிவுக்கு வரு முன்பே 'பொய்யர்' என்று முடிவெடுத்து திருப்பி அனுப்புதல்; சட்டத்தின் கீழ், அகதிகளையும், வேறு வழியில் குடிவருவோரையும் இனம்பிரித்துக் காட்டுதல்; மக்களைக் குழப்பும் வகையில் புள்ளிவிபரங்களை வெளியிடுதல்போன்றவற்றைக் குறிப்பிடலாம். முரளி: உது தஞ்சம் கோரி வந்தவனுக்கு நஞ்சைக் கொடுத்தது மாதிரியல்லோ இருக்கு! ஏன், உள்நாட்டு அமைச்சர் டோனி மக்நால்டி சொல்லியிருக்கிறார், அகதிகளை உள்வாங்கிற ரேட், ஐரோப்பிய நாடுகளை விடக் கூடிய வீழ்ச்சி இங்குதானாம். தஞ்சம் நிராகரிக்கப்பட்டவங்க தன்னிச்சையாகத் திரும்பிப் போறத்துக்கான உதவிப் பணத்தையும் கூட்டியிருக்கினமாம். காசைக் காட்டி, ஆசை கூட்டி அனுப்பப் பாக்கிறாங்கள்.

கணேஸ்: இதில விசேசம் என்னவெண்டா, நம்மை அனுப்புறதுக்கு நம்மடை ஆக்களே எல்லா விளம்பரமும் போடுறாங்க ஒருபக்கம். பாதுகாப்பில்லை அனுப்பாதே, நாட்டு நிலமை மோசமா இருக்கு எண்டிறாங்க, இன்னொரு பக்கம் ஐ.ஓ.எம். (I.O.M) இடம் போனால் டிக்கட்டும் எடுத்து பாதுகாப்புடன் நாடு திரும்பிச் செல்ல வசதிகள் செய்யப்படுமாம். எல்லாம் ஒரே குழப்பமா இருக்கு.

முரளி: இப்ப என்னதான் செய்யலாம்?

ஓரம்: தஞ்சம்கோரி வருபவர், தான் தனிப்பட்ட வன்முறைக்கும், அநியாயங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதையும், திருப்பி அனுப்பினால் தனிப்பட்ட முறையில் ஆபத்து உண்டென்பதையும், கூடியவரை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவேண்டும். நேரத்தை ஒதுக்கி, தகுந்த முறையில், தகுந்த நேரத்தில், விண்ணப்பங்கள், மேலதிகத் தகவல்களைச் சமர்ப்பிக்க சட்டத்தரணிகளும் சமூக ஸ்தாபனங்களும் உதவி செய்யலாம்.

தமக்கு விரும்பிய சமூக ஸ்தாபனத்தில் அங்கத்தவராக இருப்பதும், சட்டத்தரணியுடனான நல்லுறவைப் பேணுவதும் பயனளிக்கும். உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமைகளையும் அகதி சம்பந்தப்பட்ட விடயங்களையும் அறிந்து வைத்திருப்பது அவசியம். எல்லோரையும் தொடர்ந்து குறை கூறிக் கொண்டிருப்பது பயன் தராது; வன்செயல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடாதிருப்பது பயன் தரும்.

சிறி: சமூக ஸ்தாபனங்கள், சட்டத்தரணிகள் என்ன செய்யலாம் என்றால், மனிதாபிமானமற்ற முறையில் அகதிகள் நடத்தப்பட்டால், அதனை வன்மையாகக் கண்டித்து எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம். மேலும், இலங்கையில் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளதை நிரூபிக்கும் தகவல்களையும் அகதியின் விண்ணப்பத்துக்குப் பயன்தரக்கூடிய ஆதாரங்களையும் ஆராய்ந்தெடுத்து தரமான முறையில் அகதியைப் பிரதிநிதிப்படுத்த உதவலாம்.

ஓரம்: தஞ்சம் தொடர்பான சட்ட திட்டங்களை நியாயமான காலவரைக் குள் அனைத்துலக மனிதாபிமான கோட்பாடுகளுக்கு இணங்க அமுல் படுத்துவதை




நிச்சயப்படுத்துவதுதான் அகதிகளைப் பிரதிநிதிப்படுத்தும் சட்டத்தரணிகளினதும், ஸ்தாபனங்களினதும் முக்கிய கடமைகள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

சிறி: ஆகா! சரியான வார்த்தை!

தொகுப்பு:
விஜயபாலன்

## இன்ரநெற் சேவைகள்

மக்களுக்கு இன்ரநெற் சேவைகளை வழங்குவதில் பெயர்பெற்ற நிறுவனங்கள் பின்நிற்கின்றன என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வ ஒன்று தெரிவிக்கின்றது. ntl, BT ஆகிய நிறுவனங்கள் தம் புறொட்பான்ட் பாவனையாளர்களக்கு மோசமான சேவைகளை வழங்குவதாக uSwitch.com மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்நிறவனங்கள் முறையே 81, 82 வீதமான திருப்தியை பாவனையாளர்களுக்கு ஏற்படுத்து கின்றனர். Tiscall, Wanadoo, AOL ஆகிய நிறவனங்கள் 83 வீதமான திருப்தியை கொடுக்கின்றன.

பிளஸ்நெற் 92 வீதமான திருப்தியை கொடுத்து சிறந்த சேவையை வழங்கும் நிறுவனமாக முன்னனியில் திகழ்கிறது. அதனைத் தொடர்ந்து பைப்பெக்ஸ், ரெலிவெஸ்ற், வெர்ஜின் ஆகியவை முறையே 90, 89, 87 வீதமான திருப்தியை தமது பாவனையாளர்களக்கு வழங்குகின்றன.

### மகரந்த அலேர்ஜி நீங்க புதிய கண்டுபிடிப்பு

30 நிமிடங்களுக்கு உங்கள் துணையை கட்டி அணைத்து முத்தமிட்டால் மகரந்தத்தால் ஏற்படும் அலேர்ஜிக்கு நிவாரணம் கிடைக்கும் என ஜப்பானிய மருத்துவ ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. மகரந்தங்கள் நம் உடலை அடையும் போது தும்மல் கண்ணில் நமைச்சல், கடி, கண் மற்றும் மூக்கில் நீர் வடிதல் என்பன ஏற்படுகின்றது. சில சமயம் அஸ்மா ஆகவம் மாறகிறது. ஹெசிற்றமின் என்ற இரசாயனம் சுரக்கப்படுவதாலெயே இது ஏற்படுகிறது.

தமிழர்கள் உட்பட பிரித்தானியாவில் 13 மில்லியன் பேர் மகரந்த அலேர்ஜியால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இள வேனிற்காலத்தில் பரவலாக காற்று மண்டலத்தை அசுத்தமாக்கும் பிர்ச் மகரந்தங்களினாலேயே 25 விதமானவர்கள் பாதிக்கப் படுகின்றனர். பெரும்பாலானவர்கள் மே முதல் செப்ரம்பர் வரையான காலத்தில் புற்களில் இருந்து உருவாகும் மகரந்தங்களாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

மெல்லிசையை ரசித்த படி தங்கள் துணைகளை கட்டி அணைத்து முத்தமிடும் போது உடல் ஓய்வடைவதுடன் ஹெசிற்றமின் சுரப்பது குறைகிறது.

## தாயகக் காற்று

வெண்புறா அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தாயகக் காற்று பாடல் போட்டி நிகழ்ச்சி ஏப்ரல் 26ல் இடம்பெற்றது. குறொய்டன் த ஆச்பிசப் லன்பிறாங் ஸ்கூலில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் சினிமா பாடல்களைத் தவிர்த்து தாயகப் பாடல்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டது. வெண்புறா அமைப்பு வட-கிழக்கில் ஊனமுற்ற சிறார்களுக்கு ஊன்றுகோலாக செய்படுவது குறிப்பிடத்தக்கது.

### அரசாங்கங்களால் உறுதியளிக்கப்பட்ட சுனாமி நிதி இன்னமும் வழங்கப்படவில்லை

# அரசுகள் தங்கள் பொறுப்பிலிருந்து மெதுவாக பின்வாங்குகின்றன

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தாம் உறுதியளித்த நிதியில் 50வீதத்திற்கும் குறைவாகவே பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கி உள்ளது. மார்ச் 28ல் Organization for Economic Co-operation and Devlopment OECDஆல் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களில் இது தெரியவந்துள்ளது. சில நாடுகளின் வார்த்தைக்கும் உண்மையான நடைமுறைக்கும் பாரிய வெறபாடுகள் இருப்பதாக இப்புள்ளிவிபர அறிக்கையை வெளியிட்ட OECD இன் தலைவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் சுனாமியைத் தொடர்ந்து மக்கள் வாரி வழங்கினர். அரசாங்கங்கள் அதற்கு ஈடாக வழங்க முயற்சிகள் எடுத்தன. அனால் 15 மாதங்களுக்குப் பின் தங்கள் பொறுப்பில் மெதவாக பின்வாங்குகின்றன என்று குறிப்பிட்டார்.

அமெரிக்க உறுதியளித்த $800 மில்லியன் டொலரில் $300 மில்லியன் டொலருக்கும் குறைவான நிதியே பாதிக்கப்ட்டவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. ஜேர்மன் தான் ஒத்துக் கொண்ட $300 மில்லயன் டொலருக்கும் சற்று அதிகமான தொகையில் $100 மில்லியன் டொலருக்கம் குறைவான தொகையையே வழங்கி உள்ளது. பிரான்ஸ் அறிவித்த $250 மில்லியன் டொலரில் அரைவாசியிலும் குறைவாகவே உரியோருக்கு சென்றடைந்துள்ளது.

மாறாக ஜப்பான் உறுதியளித்த $600 மில்லியன் டொலரை பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு பெரும்பாலும் வழங்கியுள்ளது. பிரித்தானியாவும் தான் உறுதியளித்த $150 மில்லியன் டொலரில் 90 வீதத்தை பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கி உள்ளது.

நிதி வழங்கும் நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உடனடி நிவாரணமாக $1.7 பில்லியன் டொலர்களையும் நீண்டகாலத் திட்டத்தில் 2009 வரை செலவிட $1.9 பில்லியனையும் வழங்க உறுதியளித்திருந்தன.

தனிப்பட்ட முறையில் சுனாமிக்கு சேகரிக்கப்ட்ட நிதி $4.5 பில்லியன் டொலர்கள். அரசாங்கமும் ஏனைய முகவர்களும் கூட்டாக 7 பில்லியன் டொலர்களை சேகரித்திருந்தன.

### தமிழகத்தில் புதிய நடைமுறை

## தேர்ச்சி பெற்றவர்கள் அர்ச்சகர்கள் ஆகலாம்

இந்துக் கோயில்களில் எந்த சாதியினரும் பெண்களும் அர்ச்சகர்களாக வழிபாட்டு சேவையில் ஈடுபடலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது. கலைஞர் கருணாநிதி முதலமைச்சரானவுடன் கையெழுத்திட்ட முக்கிய ஆவணங்களில் இதுவும் ஒன்று. ஆகமக் கல்லூரியில் படித்த இந்துக்குள் சாதிய, பால் வேற்றுமையின்றி எவராக இருந்தாலும் ஆலயப் பணியில் ஈடுபட புதிய சட்டம் இடம் அளிக்கிறது. மேலும் தமிழில் பூசைகளை நடத்தவும் இந்த விதிமுறை இடமளிக்கிறது

மேற்படி புதிய நடைமுறை அனைத்து சாதியினரதும் தொழிற் சமத்துவத்தை மேலும் உறுதிப்படுத்தி உள்ளது. தமிழக அரசின் இந்த முடிவை பல்வேறு அமைப்புகள் வரவேற்றுள்ளன.

மேல்மருவத்தூர் போன்ற ஆலயங்களில் பெண்கள் பூசைகளைச் செய்வது குறிப்பிடத்தக்கது. இல்போர்ட், ரூற்றிங் பகுதிகளில் இயங்கும் மேல்மருவத்தூரின் கிளை ஆலயங்களில் பெண்களே பூஜைகளை நடத்துகின்றனர். மேலும் லண்டனில் உள்ள வட இந்திய ஆலயங்களிலும் பெண் அர்ச்சகர்கள் அபிஷேகம், திருமணங்களை நடத்துவது போன்ற முக்கிய அம்சங்களை சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

எட்ச்வெயர் காயத்திரி அம்மன் ஆலயத்திலும் பெண்கள் பூஜைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் முக்கிய விழாக்களையும் பெண் அர்ச்சகர்களே முன்னின்று நடாத்தும் காலம் வெகுவிரைவில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அர்ச்சகர்கள் சிலர் பாலியல் சிலுமிசம், ஒழுக்கமின்மை போன்ற விடயங்களில் படுபிசியாக இருப்பதும் கோயிலுக்கு வரும் பெண்களின் கையை தடவு வதும் சமஸ்கிருதத்தில் பெண்களை கொச்சையாக வர்ணிப்பதும் என்று அர்ச்சகர்கள் பெரும் பிசியாக ஆகிவரும் இந்நேரத்தில் பெண் அர்ச்சகர்களின் வரவும் ஏனைய பிரிவினரின் வரவும் வரவேற்கும் படியாக உள்ளது என நம்பப்படுகிறது.

### இலக்கியச் சந்திப்பில் யாரை வரவழைப்பது ?

# சர்ச்சை முடிவுக்கு வந்தது

33வது ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு யூலை 22, 23ல் லண்டனில் நடைபெறவுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்பட்டு வரும் இலக்கியச் சந்திப்பு இந்த யூலையில் லண்டனில் நடாத்த திட்டமிடப்பட்டு இருந்தது. யாரை அழைப்பது என ஏற்கனவே நான்கு கூட்டங்களில் பேசப்பட்ட போதும் மே 19 கூட்டத்திலேயே இது முடிவாக்கப்பட்டது. மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசரை அழைக்க வி சிவலிங்கம், சையட் பசீர் ஆகியோர் முன்மொழிந்த போதும் அதற்கு சில எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்தே சர்ச்சை உருவானது.

பௌசரை வரவழைப்பது தொடர்பில் இலக்கிய ஆர்வலர்களில் ஒருவரான பத்மநாப ஐயர் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். தீவிர தமிழ் தேசியவாதியாக அறியப்பட்ட ஐயர், பௌசர் வரவழைக்கப்படும் பட்சத்தில் தான் இலக்கியச் சந்திப்பில் இருந்து வெளிநடப்புச் செய்வதாகத் தெரிவித்ததாக சையட் பசீர் உதயனுக்குத் தெரிவித்தார். பௌசர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் ஐயார் தனது எதிர்ப்புக்கான காரணத்தை தெரியப்படுத்தியதாக பசீர் சுட்டிக்காட்டினார்.

தனக்கு இதுவரை இந்த இலக்கியச் சந்திப்புக்கு வரவேண்டும் என்ற எந்த ஆர்வமும் இருக்கவில்லை என்று குறிப்பிட்ட பௌசர், தன்மீதான அபாண்டமான குற்றச்சாட்டுக்குப் பின் இந்த இலக்கியச் சந்திப்புக்கு வருவது அவசியம் என்று தான் கருதுவதாக தெரிவித்துள்ளார். ஐயருடைய குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது என்று குறிப்பிட்ட சையட் பசீர், ஐயர் ஒரு இராணுவத்தின் உளவப் பிரிவைச் சேர்ந்தவர் போல் பேசுவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பாரிஸில் இடம்பெற்ற இலக்கியச் சந்திப்பின் முடிவில் லண்டனில் இலக்கியச் சந்திப்பை நடத்த வேண்டுகொள் விடுக்கப்பட்ட போது லண்டன் இலக்கியச் சந்திப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. நாவலாசிரியர் ராஜேஸ் பாலா, ஓவியர் கிருஸ்ணராஜா, விமர்சகர் வி சிவலிங்கம், விமர்சகர் பசீர் ஆகியோரே அக்குழுவில் இடம்பெறகின்றனர். இந்த குழு உறுப்பினர்கள் நால்வருமே இறுதி முடிவை எடுக்க முடியும் என இலக்கியச் சந்திப்பின் ஐரோப்பிய அமைப்பாளர் யோகன் கண்ணமுத்து (அசோக்) தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பௌசர் மீது இவ்வாறான ஒரு குற்றச்சாட்டு வைக்கப்பட்ட பின் அதனை நிரூபிக்காமல் அவரை அழைக்காமல் விடுவது மிகவும் தவறான முன்னுதாரணமாகும் எனத் தெரிவித்தார். ஐயர் ஆதாரங்களைக் கொண்டிருந்தால் அதனை ஸ்கொட்லன்ட் யாட்டிடம் ஒப்படைத்து பௌசர் லண்டன் வரும் போது கைது செய்விக்கலாமே எனத் தங்களுக்கு சிலர் சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது பௌசர் வரவழைக்கப்படுவது இறுதியாக முடிவாகியுள்ளது.

# பேனா முனைகளை மழுங்கடிக்கும் துப்பாக்கிகள்

- த ஜெயபாலன் -

இன்றைய செய்திகள் நாளைய வரலாறு. நாளைய வரலாற்றை இன்று பதிவு செய்கின்ற முதலாமவர் ஊடகவியலாளர்கள். ஒவ்வொரு சமூகத்தினதும் ஐம்புலன்களாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் காவலாளிகள். இந்த ஊடகவியலாளர்களது உரிமையை 1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் உறுதிப்படுத்தி உள்ளது. ஒவ்வொரு வரும் கருத்துக்களைக் கொண்டிருக்கவும் வெளிப்படுத்தவும் சுதந்திரமுடையவர்கள். இச்சுதந்திரம் பயமின்றி கருத்துக்களை கொண்டிருப்பதையும் கருத்துக்களையும் தகவல்களையும் தேடுவதையும் பெறுவதையும் அவற்றை வெளிப்படுத்து வதையும் உள்ளடக்குகிறது. ஊடகவியலாளர்களுக்கான இந்த 19வது சரத்து "Aritcle 19" மிகவும் பிரபலமான ஒரு சரத்து.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலம் முதலே ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதுமான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு இருந்தது. ஒடுக்கும் பேரினவாத அரச இயந்திரம் மட்டுமல்லாமல் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போரிட்ட அனைத்து தமிழ் போராளிக் குழுக்களும் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதன் உச்சமாக பல வரலாற்றுப் பதிவாளர்கள் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்த நீண்ட பட்டியலில் இப்போது யாழ் உதயன் தாக்குதலும் சேர்க்கப்பட்டு விட்டது. மே 3ல் சர்வதேச ஊடக சுதந்திர தினம் World Press Freedom Day, UNESCO ஆல் அறிவிக்கப்பட்டது. இத்தினத்திற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் உதயன் அலவலகம் தாக்கப்பட்டு உள்ளது.

ஊடகங்களுக்கு எதிரான நேரடியான அல்லது மறைமுகமான வன்முறையின் விளைவாக ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் தமிழ் ஊடகங்கள் சுயதணிக்கைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. பேனா முனைகள் துப்பாக்கி முனைகளால் மழுங்கடிக்கப்பட்டது. இது தாயகத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த மண்ணிலும் கொலை, கொலை மிரட்டல் எனத் தொடர்ந்தது. செய்திகளின் பலம் இன்று துப்பாக்கிகளிலும் பெறுமதியானது என்ற காலத்தில் நாம் வாழ்கிறோம், அதனை பொறுப்புடன் கையாள்வது இன்றியமையாதது.

தமிழ் சமூகத்தில் ஊடகங்களின் சுதந்திரம் என்பது சார்புநிலைப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. யாரால் யார் சுடப்பட்டார்கள் என்பதைப் பொறுத்தே கண்டனம் தெரிவிப்பதா அல்லது பேசாமல் விடுவதா என்று தீர்மானிக்கப்படுகிறது. இங்கு 'ஆட்டிக்கிள் 19' அடிபட்டுப் போய்விட்டது. இன்று தமிழ் ஊடகவியலாளர்களுக்காக பரபட்சம் இன்றி குரல் கொடுப்பது சிங்கள, மற்றும் சர்வதேச ஊடகங்களே. தமிழ் ஊடகங்களிடம் இன்னமும் இந்த ஊடகவியல் பண்பு வளரவில்லை என்பது வேதனையான உண்மை.

# அவமானம்: எழுத்தைத் திருடிய இளம் பெண்

சர்வதேச எழுத்தானர்களின் எழுத்தைத் திருடியதால் காவியா விஸ்வநாதனுடன் செய்து கொண்ட பதிப்பு ஒப்பந்தம் கைவிடப்பட்டது. ஹவார்ட் பல்கலைக்கழக மாணவியான 19 வயதுடைய காவியாவுடன் லிட்டில் பதிப்பகம் மேற்கொண்டிருந்த 280,000 பவுண் ஒப்பந்தம் கைவிடப்பட்டது. How Opal Mehta Got Kissed, Got Wild and Got a Life ஆகிய இரு நூல்களது பதிப்பையும் லிட்டில் பதிப்பகம் நிரந்தரமாக கைவிட்டுள்ளது.

இவரது நாவலைப் படமாக்கும் உரிமையைப் ஸ்ரீபன் ஸ்பில்பெர்க்கின் ட்றிம்ஸ் வேக்ஸ் ஸ்ரூடியோ பெற்றிருந்தது. அவர்களும் அதனைக் கைவிட்டுள்ளனர்.

காவியா தான் சில எழுத்தாளர்களின் பல பந்திகளை அறியாமல் பிரதி செய்ததை ஒத்துக்கொண்டுள்ளார். Sophie Kinsella's Can You Keep a Sceret, Meg Cabot's The Princess Diaries ஆகியவற்றிலிருந்த காவியா பந்திகளைக் கொப்பி செய்துள்ளார். நியூஜேர்சியில் வெளியாகும் பத்திரிகை காவியா தனது பத்திரிகையில் எழுதிய ஆக்கங்களை மீள்பார்வை செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளது.



மாணவி காவியா விஸ்வநாதன்

# கண்டதும் கேட்டதும் : தலைமுறை உறவுகள்

## மேற்கத்திய நாடுகளில் தமிழ் பெற்றார்களும் இளம் பெண்களும்



தமிழ் மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்த (06.02.2006) சந்திப்பில் "மேற்கத்திய நாடுகளில் தமிழ் பெற்றார்களும் இளம் பெண்களும்" என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட விடயத்தின் சுருக்கம்.

நம்மில் பெரும்பாலோர் பெற்றோர்களிடத்திலும் வயதுவந்த எமது பிள்ளைகளிடத்திலும் நல்லுறவையே வைத்து இருக்கின்றோம். ஆனால், சில குடும்பங்களில் முரண்பாடுகள் நிலவுகின்றன. முரண்பாடுகளுக்கான காரணங்களை ஆரம்பத்திலேயே தீர்க்காதுவிடில், வேதனை தரக்கூடிய கடினமான சண்டைகளாக அவை மாறிவிடுகின்றன.

பெரும்பாலும், யார் கையில் கட்டுப்படுத்தும் அதிகாரம் உள்ளது என்ற கேள்வியிலிருந்து சண்டை ஆரம்பிக்கிறது. பெற்றோர்கள் நீண்ட காலம் கட்டுப்பாட்டைத் தங்கள் கைக்குள் வைத்திருந்ததால், அந்த அதிகாரத்தை அவர்கள் இழக்க விரும்புவதில்லை. இளையவர்களோ, புதிய கருத்துக்களைச் செயல்படுத்த விரும்புகிறார்கள். இந்நிலையில் முரண்பாடுகள், வாக்குவாதங்கள், பிரிவினைகள் ஆரம்பமாகின்றன.

தலைமுறைகளுக்கு இடையிலான போராட்டங்களை நோக்கும் நிலைகளிலும் கூட, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேறுபாடுகளைக் காணலாம். பெண்களே குடும்பப் பிரச்சனையில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

அனைத்துக் குடும்பங்களிலும் சண்டை, சச்சரவு இருப்பது சகஜம். அவை ஏன் நடக்கின்றன என்பதை அறிந்திருந்தாலும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துப் பலருக்குத் தெரிவதில்லை.

சில சமயங்களில் குடும்பப் பூசல்கள் தீருவதே இல்லை. சண்டைகளைத் தீர்க்க முயற்சி செய்யாமல் அவ்வாறே விட்டுவிட்டால், தானாகவே அவை தீர்ந்து விடும் என்பது சிலரது நம்பிக்கை. ஆனால் இது பயன் தருவதில்லை. இதனால் நாம் பிடிவாதக்காரர்களாகி வேதனைப்படுவோம். இது நம் தவறு அல்ல, அவர்களது தவறு என்று கூறுகிறோம். நாம் எதற்காகக் கோபப்படுகிறோம் என்று குழம்பிப் போய் விடுகிறோம். நாம் உண்மையாக அன்பைத் தேடினாலும், பணத்துக்காக, அல்லது வேறு சாதாரண விடயங்களுக்காகச் சண்டை பிடிப்போம். மற்றவர்கள் நம்முடைய கருத்தை ஆமோதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். சம்பந்தப்பட்ட மற்றவர் மாறினால் பிரச்சனையைத் தீர்த்து விடலாம் என்று எண்ணுகிறோம்.

### குடும்பச் சண்டைகள் வரும்பொழுது நாங்கள் என்ன செய்ய முடியும்?

கோபம் என்னும் விளைவு நம்முள் பிரச்சனை இருப்பதை உணர்த்துகிறது. கோபம் வருவது தவறில்லை. அது நமக்கு நிைறயச் சக்தியைக் கொடுக்கிறது. அந்தச் சக்தியைப் பயன்படுத்தி நாம் பிரச்சனைகளைத் தீர்க்கலாம். பின்வரும் செயற்பாட்டு முறைகளை நாம் கையாளலாம்:

### அமைதி கொள்ளுங்கள்:

- ☐ உங்கள் உடலில் கோபத்தின் ஆரம்ப அறிகுறிக ளைத் தெரிந்து கொள்ளுங்கள் (முகம் கொதித்தல் அல்லது சிவத்தல் பற்களைக் கடித்தல் தசைகள் இறுகுதல்)
- ☐ சிறிது நேரத்துக்கு வெளியே நடந்து செல்லுங்கள்.
- ☐ உங்கள் சக்தியை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்துங்கள். வீட்டைச் சுத்தம் செய்யுங்கள் தோட்டத்தில் களையெடுங்கள் அல்லது நீங்கள் பதிலளிக்கு முன் காரைக் கழுவுங்கள்.

### உங்கள் பிரச்சனை குறித்துச் சிந்தியுங்கள்

- ☐ ஏன் கோபமாக உள்ளீர்கள்?
- ☐ நீங்கள் என்ன செய்ய முடியும்?
- ☐ நீங்கள் இதைச்செய்தால் என்ன நடக்கும்?

### கவனமாகக் கேளுங்கள்

- ☐ உண்மைகளை உறுதி செய்யுங்கள்.
- ☐ உண்மையுடன் மரியாதையுடன் இருங்கள்.
- ☐ பிறர் பேசும் பொழுது இடைமறிக்காதீர்கள்.
- ☐ கண்டனங்களைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளுங்கள்.

### மிகக் கவனமாக பேசுங்கள்

- ☐ குறிப்பிட்ட விடையத்தை மாத்திரம் பேசுங்கள்.
- ☐ தெளிவோடு இலக்கோடு இருங்கள்.
- ☐ அறிவுரை கூறுவதைக் கட்டுப்படுத்துங்கள்.
- ☐ பழைய கதைகளைக் கிண்டாதீர்கள்.

### கடந்ததை மன்னியுங்கள்

- ☐ கடந்த காலத்தை விடுங்கள்.
- ☐ மனக் குறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்காதீர்கள்.
- ☐ அது மனக் குறைகளை மறுப்பது அல்ல.
- ☐ இதற்கு நேரத்தையும் முயற்சியையும் எடுத்துக் கொள்ளுங்கள்.
- ☐ இதுவே முரண்பாடுகளை, சண்டைகளை, போராட்டங்களைத் தீர்க்க முதல் படியாகும்.

தொகுப்பு: துளசி

MORTGAGE PLUS
LONDON LTD
Mortgages Tailor-Made for you
Specialist in CCJ / Default Cases
020 8571 2570
077 1015 0713
81, South Rd, Southall, Middx, UB1 1SQ

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre
Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk

No Income Proof
CCJs * Defaults Up To 95%
Loan / Mortgage Arrears
100% Mortgage Available
Self Certificate Available (up to 90%) LTV
Self Employed or Employed
Discharged Bankrupts
Council RTB 100% (inc. adverse)
LOCAL COMMUNITY HOUSING FINANCIAL SERVICES
*Are you having problems getting a mortgage (Mortgage Declined? We can help)*
FSA Approved
Buy to Let or Let to Buy
Buy to Let Foreign Nationals
Commercial Mortgage Arranged
Secure Loans
Principle Offer Within 24hrs (subject to status)
All Type Of Property Insurance Available
FOR AN IMMEDIATE DECISION CALL THE MORTGAGE SPECIALIST ON
Tel: 020 8980 2121
Mob: 07956 914 735
Fax: 020 8980 8966
Consultation ask for Mr Prabaharan
153/159 Bow Road, London E3 2SE
Email: thiruprabaharan@hotmail.com
Your home is at risk if you do not keep up payments on a mortgage or other loan secured on it.

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

David Shine & Kharhanda Solicitors
Divorce, Litigation,
Wills Probate,
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

Khosla & Co.
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

# அரசியல் நிலவரம்: இந்து சாம்ராஜ்யம் நேபாளத்தில் இந்திய அமைதிப்படை?



நேபாளத்தில் கடந்த ஆண்டு பெப் 1ம் திகதி பிரதமர் ஹேர் பகதூர் தேவ்பா தலைமையிலான ஆட்சியைக் கலைத்து மன்னராட்சியை அறிவித்தார் ஞானேந்திரர். மன்னரின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு எதிராக நேபாள 7 கட்சி கூட்டணி அரசியல் ரீதியாக எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இக்கட்சியின் தலைவர்களை வீட்டுக்காவலில் அடைத்து சிறை வைத்தார் மன்னர் ஞானேந்திரர். மேலும் நீண்ட காலமாகவே மன்னரின் அதிகாரத்தை எதிர்த்து மாவோயிட்ஸ் போராளிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள். இவர்களின் தீவிரமான போராட்டத்தின் விளைவாக உலக சமூகமே நேபாளத்தின் மீது தனது பார்வையை செலுத்தியது. மேலும் மன்னருக்கு ஆலோசனைகள் வழங்கி அரசியல் கட்சிகளிடம் அதிகாரத்தை வழங்கும் படியும் மாவோயிஸ்டுக்களை தடுக்க உதவி புரிவதாகவும் உலக சமூகம் கூறிவந்தது.


நேபாளத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டும் போராட்டம் தீவிரம் அடைந்தது. இந்நிலையில் இந்தியாவின் சிறப்பு தூதுவராக கரண்சிங்கும் இந்திய வெளியுறவு துறை செயலாளர் ஷியாம் சரணும் நேபாளத்துக்கு சென்று மன்னர் ஞானேந்திரர்க்கு சில ஆலோசனைகளை வழங்கி உள்ளனர். மேலும் மன்மோகன்சிங் கொடுத்தனுப்பிய கடிதத்தையும் மன்னரிடம் ஒப்படைத்தனர். இந்த ஆலோசணையின் பின்னணியில் மக்களாட்சிக்கு வழிகோலும் அறிவிப்பை வெளியிட்டார் மன்னர் ஞானேந்திரர்.

நேபாளத்தில் பல கட்சி ஆட்சிமுறையை கொண்டுவர வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் இந்திய அமைதிப்படையை நேபாளத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிவரும் என்றும் எச்சரித்ததாக இந்திய இராஜதந்திர வட்டாரங்களின் செய்திகள் கூறுகின்றன. மன்மோகன்சிங்கின் கேரள விஜயத்தின் போது அளித்த பேட்டியும் இதை உறுதி செய்கின்றது.

7 கட்சிக் கூட்டணியின் கோரிக்கையை ஏற்று தேர்தல் முடிவடைந்து புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை தற்காலிகப் பிரதமர் யார் என்பதை அறிவிக்குமாறு 7 கட்சிக்கூட்டணிக்கு ஞானேந்திரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நேபாள தொலைக்காட்சியில் இவ்வேண்டுகோள் ஒளிபரப்பப்பட்டது. ஐ.நா வும் அமெரிக்காவும் இதனை வரவேற்றுள்ளன. நேபாள அரசமைப்புச் சட்டப்பிரிவு 35 இன்படி மக்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதாகவும் ஞானேந்திரர் அறிவித்தார். தேர்தல் நடைமுறைகள் முழுமையாக முடிந்து புதிய அரசு பதவியேற்கும் வரை தற்போதுள்ள அமைச்சர்களே அரசு நிர்வாகத்தை கவனிப்பதாக மன்னர் அறிவித்தார். தேர்தல் எப்போது நடைபெறும் என்பது மன்னரின் அறிவிப்பில் இடம்பெறவில்லை.

மன்னரின் அறிவிப்பை 7 கட்சிக்கூட்டணி முதலில் நிராகரித்தது. இடைக்காலப் பிரதமரின் பெயரை அறிவிக்குமாறு மன்னர் விடுத்த வேண்டுகோளை 7 கட்சிக்கூட்டணி நிராகரித்ததுடன் மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சி அதிகாரம் முழுமையாக ஒப்படைக்கப்பட வேண்டும், அரசமைப்புச் சட்டப்பிரிவு 127ஐ பயன்படுத்தி ஆட்சியை கலைக்கும் அதிகாரம் மன்னருக்கு இருக்கும்வரை முழுமையான மக்களாட்சி ஜனநாயகத்துக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. இந்த சட்டத்தை பயன்படுத்தி எப்போது வேண்டுமானாலும் மக்களாட்சியை மன்னர் கலைக்கலாம் என்றது நேபாள 7 கட்சி கூட்டணித் தலைவர்களின் அறிக்கை.

மேலும் நாடாளுமன்றத்தை மீண்டும் இயங்கச்செய்ய வேண்டும். அனைத்து கட்சி அரசை அமைப்பதுடன் மாவோயிட்டுகளுடன் பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் மற்றும் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி புரிந்துணர்வுடன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளையும் 7 கட்சி கூட்டணி முன்வைத்துள்ளது. ஆனால் தனது நிலைப்பாட்டை இக்கூட்டணி பின்னர் மாற்றிக் கொண்டு மன்னரின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.



இதற்கிடையே ஊரடங்கு உத்தரவை மீறி தலைநகர் காத்மண்டுவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ‘ஞானேந்திரா (படம்) நாட்டைவிட்டு வெளியேறு’ என்று கோஷமிட்டு முக்கிய சாலைகளில் போராட்டத்தை நடத்தினர். மக்களை விரட்ட வந்த பாதுகாப்பு படையினரை மக்கள் விரட்டி அடித்தனர். ஆனால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதென்று அரசர் ஞானேந்திரர் விடுத்துள்ள பிரகடனத்தை மாவோயிட்ஸ் இயக்கம் நிராகரிப்பதாக கூறியுள்ளது. இவர்கள் முதலில் அரசமைப்புச் சபைக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். கூட்டணி தனது நிலையை தற்போது மாற்றிக் கொண்டதை கண்டித்துள்ள மாவோயிட்ஸ்கள் இந்த முடிவு ஏற்கனவே ஒப்புக்கொண்ட 12 அம்ச திட்டத்துக்கு எதிரானது என்று கூறியுள்ளனர்.

ஞானேந்திராவின் பிரகடனம் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேவலப்படுத்துவதாகவும் இதற்கு கூட்டணியினர் துணைபோனது மக்களுக்கு இழைத்த துரோகம் எனவும் மாவோயிட்ஸ்கள் தெரிவித்துள்ளனர். சிறை வைக்கப்பட்டுள்ள மாவோயிஸ்டுகள் விடுவிக்கப்பட வேண்டும், தற்போது கூட்டப்பட்ட பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து முக்கிய தலைவர் பிரசண்டா தலைமையிலான மூவர் கொண்ட குழு அரசுடன் பேச மே 22ல் காத்மண்டு வந்துள்ளனர்.

## பிஜித் தீவில் தேர்தல் பூர்வ குடியினர் ஆட்சி

பிஜித் தீவில் 6ம் திகதி முதல் 13ம் திகதி வரை நடந்த தேர்தல் பூர்வ குடிகள் அமோக வெற்றி பெற்றுள்ளனர். இதில் முன்னாள் பிரதமரும் இந்தியருமான மகேந்திர சவுத்திரியும் போட்டியிட்டார்.

பசுபிக் பெருங்கடலில் அவுஸ்திரேலியா அருகில் உள்ளது பிஜித்தீவு. இது இங்கிலாந்து ஆட்சியின் கீழ் இருந்த போது இங்கு கரும்பு தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியர்களை அழைத்துச் சென்று வெள்ளையர்கள் குடியமர்த்தினார்கள். நாட்டு மக்கள் தொகையில் 44 சத வீதம் இந்திய வம்சாவழியினர். மேலும் நாட்டின் பொருளாதாரமும் இந்தியர்களின் கையில் இருப்பதால் பூர்வகுடியினருக்கு இந்தியர்களின் அரசியல் செல்வாக்கும் ஆட்சியை பிடிப்பதும் ஏற்க முடியாத ஒன்றாக உள்ளது. மொத்த மக்கள் தொகை 9 லட்சத்து 6 ஆயிரத்தில் 51 சதவீதம் பூர்வீகக் குடியினர்.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மகேந்திர சவுத்திரி முதல் முறையாக பிரதமர் ஆன போது பூர்வீகக்குடிகள் அவரை பணையக் கைதியாக 56 நாட்கள் வைத்திருந்து பின்பு விடுவித்தனர். அவர் ஆட்சி அவர் கையை விட்டுப்போனது. அவருக்கு பதிலாக புதிய பிரதமராக பூர்வீக குடியைச் சேர்ந்த லைசேனியா குவாரேசேயை ராணுவம் பிரதமராக நியமித்தது. அவரது பதவிக்காலம் முடிவடைந்ததை ஒட்டி மீண்டும் தேர்தல் நடந்தது.

1970ம் ஆண்டு தான் பிஜி விடுதலை பெற்றது. வளர்ந்து வரும் நாடான இது ஒரு இந்தியரை பிரதமராக ஏற்றுக் கொள்ள தயாராகவில்லை. எனவே தொழிற்கட்சி வெற்றி பெற்றாலும் ஒரு பூர்வீகக் குடிமகனை பிரதமர் ஆக்க வேண்டிய நிலையே அங்கு இருந்தது.

## சுற்றுலாப் பயணிகளை கவரும் இலங்கை

இந்திய சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல்வேறு முயற்சிகளில் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை, விமான நிறுவனங்கள் மற்றும் தாஜ் ஹொட்டல் நிறுவனம் என்பன ஈடுபட்டுள்ளன. இதற்கான வீதிக் கண்காட்சிகள் இந்தியாவின் பிரதான நகரங்களில் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு 113,000 இந்தியர்கள் இலங்கைக்கு சுற்றுலா சென்றுள்ளனர். 2006 இல் இத்தொகையை 150,000 ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இலங்கைக்கு 550,000 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். இதனை அடுத்த ஆண்டு 600,000 ஆகவும் 2010ல் 1,000,000 ஆகவும் உயர்த்த இலங்கை முயற்சி செய்கிறது.

## மியான்மர் ராணுவ ஆட்சியாளர்களுக்கு கை கொடுக்கிறது இந்தியா

தன்னை ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் இந்தியாவின் தற்போதைய நடவடிக்கை அதன் முகமூடியை கிழிக்கும் விதத்தில் அம்பலப்பட்டு உள்ளது. உலகில் மிக அதிக அளவில் மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் ஒன்றானதும் இந்தியாவின் அண்டை நாடுமான மியான்மரில் (பர்மாவில்) 1962 இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து அங்கு வரலாறு காணாத மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன. ராணுவ ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தவர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டதுடன் வீட்டுக்காவலிலும் வைக்கப்பட்டனர்.



1988ல் ஏற்பட்ட உணவுப்பொருள் பற்றாகுறையினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இந்த காலகட்டத்தில் 8.8.88 ல் ரங்கூன் நகரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக கிளர்ந்த ஊர்வலத்தில் போலீசார் சுட்டு ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். அதன் பின்னரும் பல கிராமங்களும் நகரங்களும் மக்கள் வாழ முடியாத அளவுக்கு தரைமட்டமாக்கப்பட்டதாக உலக மனித உரிமை கழகம் கூறுகின்றது. உலக நெருக்கடியின் காரணமாக 485 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்துக்கு 1989ல் தேர்தல் நடத்த ராணுவ அரசு சம்மதித்தது. இருப்பினும் ஆயிரக்கணக்கானோர் சிறையிலும் அரசியல் தலைவர்கள் வீட்டுச்சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

இத்தேர்தலில் தேசிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஆங்கசான் சூகீயும் ராணுவ அதரவு பெற்ற தேசிய ஒருமைப்பாடு கட்சியும் சில சமூக கட்சிகளும் போட்டியிட்டதில் ஆங்கசான் சூகீயின் தேசிய ஜனநாயக கட்சி மொத்தமுள்ள 485 இடங்களில் 392 இடங்களை கைப்பற்றியது. சிறு கட்சிகள் 65 இடங்களை கைப்பற்றியது. ராணுவ ஆதரவு தேசிய ஒருமைப்பாட்டு கட்சி 10 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ராணுவ அரசு சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான ஒரு குழுவை தெரிவு செய்யவே தேர்தல் நடத்தப்பட்டதாக கூறினர்.

1995வரை சூகீ வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இவருக்கு இதே ஆண்டு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. பின்பு விடுவித்து மீண்டும் கைதுசெய்து 2001ல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். ராணுவ அரசின் நெருக்கடியில் இருந்து தப்பிய பலர் நாடோடிகளாக அலைகின்றனர். ராணுவத்தினரால் பாலியல் பலாத்காரங்கள் மியான்மர் முழுவதிலும் நடைபெறுகின்றது. இவ்வளவு மனித உரிமை மீறல்கள் செய்கின்ற அரசு சிக்கல் இல்லாமல் ஆட்சி செய்வதற்கு சீனா, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து வரும் அரசியல் மற்றும் பொருளாதார உதவிகள் ஒரு முக்கியமான காரணமாகும். குறிப்பாக இந்தியா செய்துவரும் நிபந்தனையற்ற உதவிகளால் தான் மியான்மரில் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

இவ்வளவு நெருக்கடியிலும் சமீபத்தில் மியான்மருக்கு பயணம் செய்த இந்திய குடியரசுத் தலைவர் ஜனாதிபதி அப்துல்கலாம் (படம்) மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பது அந்நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமேயாகும். இந்த ஒப்பந்தம் மியான்மரின் ஜனநாயகத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் துரதிஷ்டவசமானதாகும்.




## குடியேற்ற சட்டத்துக்கு எதிர்ப்பு அமெரிக்காவில் போராட்டம் வலுக்கிறது

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள வெளி நாட்டினரை கட்டுப்படுத்த அவர்களை குற்றவாளிகள் என்று அறிவிக்கும் சட்டம் சட்டமாக்கப்படுவதற்கு எதிராக பெரும் போராட்டங்கள் அமெரிக்காவின் பல நகரங்களில் மே தினத்தன்று நடைபெற்றது. US House of Representatives இனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இச்சட்டம் தற்போது அமெரிக்க கொங்கிரஸில் விவாதிக்கப்பட்டு வருகிறது. மெக்சிக்கோ எல்லையில் தடுப்பு சுவர் அமைக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து A Day Without Immigrants என்று கூறி 10 லட்சம் பேர் லாஸ்ஏஞ்சல்சிலும் சிக்காகோவிலும் பிரதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான குடியேற்றக்காரர்களின் தாயகமான மெக்சிகோவிலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஆதரவாக குரல்கொடுத்தனர்.

அமெரிக்காவில் 11.5 மில்லியன் குடியேற்றக்காரர்கள் சட்டவிரோதமாக வாழ்வதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இவர்கள் அமெரிக்கர்கள் செய்ய விரும்பாத தொழில்களில் மிக மோசமான நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் அமெரிக்க பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் கணிக்கப்படுகின்றனர். செப்ரம்பர் 11 குண்டு வெடிப்பில் நூற்றுக் கணக்கான குடியேற்ற வாசிகள் கொல்லப்பட்டனர். இவர்களுக்கு எவ்வித நட்ட ஈடுகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.




### ஜப்பானுக்கு தென்கொரியா

## எச்சரிக்கை

தென்கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் கடலில் உள்ள ஒரு தீவு தான் டோக்கோ. இந்த தீவை ஜப்பானியர்கள் டேகேஷிமா என்று அழைக்கிறார்கள். தங்களது விருப்பப்படி இந்த தீவை இரு நாடுகளும் வெவ்வேறு பெயரில் அழைத்துக் கொள்வதுடன் இரு நாடுகளும் இந்த தீவுக்கு சொந்தம் கொண்டாடி வருகின்றன. இந்த தீவை ஒருபோதும் ஜப்பானுக்கு விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று தென்கொரிய ஜனாதிபதி ரோக் முஹியூன் கூறியுள்ளார். ஜப்பான் இத்தீவை ஆக்கிரமிக்க நினைத்தால் கடும் விளைவை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## அணு ஆயுத ஏவுகணை, பாகிஸ்தான் சோதனை

அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் நீண்ட தூர ஏவுகணை ஷாகின்-2 வெற்றிகரமாக பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. தரையின் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்தில் உள்ள இலக்கை தாக்கும் தன்மை கொண்ட இந்த ஏவுகணை 2500 கிலோமீற்றர் தூரம் வரை பாய்ந்து செல்லும். அணுகுண்டுகளையும் ஆயுதங்களையும் சுமந்து செல்லும் திறன் படைத்தது. இந்த பரீட்சார்த்த நிகழ்வில் பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அசீசும் கலந்து கொண்டு விஞ்ஞானிகளையும் தொழில்நுட்ப வல்லுனர்களையும் பாராட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்ய அணுசக்தி உள்ளிட்ட எல்லா வளங்களையும் பாகிஸ்தான் தொடர்ந்து பயன்படுத்தும் என்று தெரிவித்தார்.

## வங்கி கொள்ளை

### ஜேர்மன் பொலிஸ் கமிஷனர் கைது

ஜேர்மன் நாட்டு பொலிஸ் கமிஷனர் டிரையர் என்ற இடத்தில் உள்ள வங்கிக்குச் சென்று நேராக வங்கியின் மேலாளரிடம் போய் பணம் கொடுக்கும்படி மிரட்டியுள்ளார். பணம் கொடுத்ததும் காரில் ஏறி தப்பிவிட்டார். பின்னர் காரை வழியில் நிறுத்திவிட்டு தலைமறைவாகிவிட்டார். கார் நிற்பதைப் பார்த்த பொலிசார் விசாரணை நடத்தியதில் அக்கார் கமிஷனரின் காதலிக்கு உரியது என்று தெரிய வந்தது. அந்த பெண்ணை கேட்டபோது காரை கமிஷனருக்கு தான் இரவல் கொடுத்ததாக அவர் கூறினார். பின்பு பொலிசார் கமிஷனரை தேடி கண்டுபிடித்து கைது செய்தனர்.

## ஆப்கானில் நீதிபதி சுட்டுக்கொலை

ஆப்கானிஸ்தான் நாட்டில் பாரா மாநிலத்தை சேர்ந்த மூத்த நீதிபதி ஷேக் அகமது. இவர் மசூதியில் தொழுகை நடத்திவிட்டு வீட்டுக்கு திரும்பும் வழியில் அடையாளம் தெரியாத இரு நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சென்றுள்ளனர். யாரும் இக்கொலைக்கு பொறுப்பு ஏற்காத நிலையில் தாலிபான்கள் மீது சந்தேகம் இருப்பதாக கூறப்படுகின்றது.

## அமைதிப் போராட்டத்தின் பெயரில் வன்முறை

Salwa Judum - அமைதிப் போராட்டம் என்ற பெயரில் இந்தியாவின் இதயமான சடீஸ்கார் பகுதியில் நக்சல்பாரிகளுக்கு ஆதரவான பொதுமக்கள் மீது இந்திய அரசு மோசமான வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. பஸ்ரார் பகுதியில் 70க்கும் மேற்பட்ட கிராமங்கள் எரிக்கப்பட்டு 40 பெண்கள் குழுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படத்தப்பட்டு அவர்களது வாழ்வாதாரங்களும் நிர்மூலமாக்கப்பட்டு உள்ளது என Revolutionary Democratic Front தெரிவித்துள்ளது.

## பலஸ்தீனத்துக்கு ஈரான் உதவி அமெரிக்கா ஆத்திரம்



பலஸ்தீனத்தில் நடந்து முடிந்த தேர்தலில் ஹமாஸ் அமைப்பு வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது. ஹமாஸ் வெற்றியை அங்கீகரிக்க அமெரிக்க மற்றும் ஐரோப்பிய யூனியன்கள் மறுத்து வந்ததுடன் இஸ்ரேலுடன் தொடர்ந்து மோதல் போக்கை கொண்டுள்ளதாக ஹமாஸ் மீது குற்றம் சாட்டியுள்ளது.

பலஸ்தீனத்தில் நிதி நிலமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. முன்பு மேற்கண்ட நாடுகள் நிதியுதவி அளித்து வந்தன. ஹமாஸ் இஸ்ரேலுடன் மோதல் போக்கை கைவிட்டு அந்நாட்டை அங்கீகரிக்குமாறு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய யூனியன்கள் கோரிக்கை விடுத்தன. இக்கோரிக்கையை நிராகரித்ததனால் பலஸ்தீனத்துக்கு வழங்கப்பட்ட நிதியுதவி நிறுத்தப்பட்டது.

அணுமின் திட்டத்தில் தலையிட்டு அச்சுறுத்தும் அமெரிக்காவின் நிலைக்கு எதிராக செயற்பட்டு வரும் ஈரான் தற்போது சர்வதேச நாடுகளின் நிதியுதவி பலஸ்தீனத்துக்கு மறுக்கப்பட்டால் ஈரான் நிதியுதவி அளிக்கும் என அறிவித்திருந்தது. இந்நிலையில் பலஸ்தீனத்துக்கு ஆதரவு தரும் நாடுகளின் கூட்டம் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் அண்மையில் நடந்தது. அப்போது ஈரான் நாட்டின் வெளியுறவு அமைச்சர் நிதியுதவிக்கான அறிவிப்பை வெளியிட்டார். 50 மில்லியன் அளவுக்கு ஈரான் நிதியுதவி அளிக்க முன்வந்தள்ளது. (படத்தில் ஈரான் பலஸ்தீனிய அதபர்கள் கைகோர்த்துக் கொள்கின்றனர்.) இதனால் மேலும் ஈரான் மீது அமெரிக்கா ஆத்திரத்தையும் எரிச்சலையும் கொண்டுள்ளது.

## எண்ணெய் ஊழல்

### விசாரணை கமிஷன் முன்பு அவுஸ்திரேலிய பிரதமர் ஆஜர்



சதாம் உசைன் ஈராக் நாட்டின் அதிபராக இருந்தபோது ஐ.நா பொருளாதார தடை விதித்து இருந்தது. இத்தடை காரணமாக ஈராக் மக்கள் உணவுப்பொருள் கிடைக்காமலும் உயிர்காக்கும் மருந்துகள் கிடைக்காமலும் மிகவும் கஷ்ரப்பட்டனர். இதைத் தொடர்ந்து உணவுப்பொருட்களையும் மருந்துகளையும் இறக்குமதி செய்வதற்கு தேவையான அளவுக்கு பெட்ரோலை ஈராக் இறக்குமதி செய்யலாம் என்ற திட்டத்தை ஐ.நா கொண்டுவந்தது. இந்த உணவுக்கு பெட்ரோல் திட்டத்தில் மோசடி நடந்ததாகவும் தேவைக்கு அதிகமாக பெட்ரோல் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் பலர் சதாம் உசைனுக்கு லஞ்சம் கொடுத்து பெட்ரோல் இறக்குமதிக்கான கொன்ராக்ட் பெற்றனர் என்றும் ஐ.நா விசாரணைக் கமிசன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் உள்ள கோதுமை வாரியம் ஆயிரத்து 100 கோடி ரூபாய் சதாம் உசைனுக்கு லஞ்சமாக கொடுத்து பெட்ரோல் இறக்குமதிக்கான ஒப்பந்தங்களை பெற்றதாக ஐ நா கமிஷன் குற்றம் சாட்டி இருந்தது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக அவுஸ்திரேலியாவில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் முன்பு அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ட் ஆஜரானார்.

கடந்த 25 ஆண்டுகளில் அவுஸ்திரேலிய பிரதமர் ஒருவர் விசாரணைக் கமிஷன் முன்பு ஆஜராவது இதுதான் முதல் முறையாகும். சிட்னியில் நடைபெற்ற இவ்விசாரணைக் கமிஷனுக்கு ஆஜராக வந்த பிரதமர் ஜோன் ஹோவர்ட்டுக்கு எதிராக போர் எதிர்ப்பாளர்கள் ஜோன் ஹோவர்ட் பொய்யர், கிரிமினல் என்று முழக்கமிட்டனர். துணைப்பிரதமர் மார்க்வில்லே, வெளிநாட்டு மந்திரி அலெக்சாண்டர் டோனர் ஆகியோரும் இக்கமிஷன் முன்பு ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

## உலக இறைச்சி உணவு மாநாட்டை எதிர்த்து நிர்வாணப் போராட்டம்

அவுஸ்திரேலியாவில் உள்ள பிரிஸ்டேன் நகரில் உலக இறைச்சி மாநாடு தொடங்குகிறது. இதில் உலகம் முழுவதிலும் உள்ள மாட்டு இறைச்சி மற்றும் ஆடு, கோழி இறைச்சித் தொழிலில் உள்ளவர்கள் 600 பேர் கலந்து கொள்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக மிருக விடுதலை இயக்கத்தினர் 40க்கும் மேற்பட்டவர்கள் மாநாட்டு மண்டபம் முன்பு நிர்வாணப் போராட்டம் நடத்தப் போவதாக தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 5 ஆயிரம் கோடி ஆடு, மாடு, கோழிகள் உணவுக்கார கொல்லப்படுவதாக மிருக விடுதலை இயக்கத் தலைவர் ஆஞ்சி ஸ்டீபன்சன் கூறியுள்ளார்.

## சாலமன் தீவு பிரதமர் ராஜினாமா




பசுபிக் கடலில் 13 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பில் உள்ள 992 தீவுகளைக் கொண்டது சாலமன், ஒரு தீவு நாடு. இந்த நாட்டில் அண்மையில் தேர்தல் நடந்தது. இதில் சினிடர்ரினி வெற்றிபெற்றுள்ளார். இந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாக கூறி எதிர்கட்சிகள் தேர்தல் செல்லாது என அறிவிக்க கோரி பிரதமர் சினிடர்ரினிக்கு எதிராக கலவரத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்றம் கலகக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டது. அவுஸ்திரேலியாவில் இருந்து அதிரடிப்படையினர் வந்து பிரதமரை மீட்டனர்.



இந்நிலையில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக எதிர்க் கட்சிகள் அறிவித்தன. அதனைத் தொடர்ந்து தனது பதவியை பிரதமர் திடீர் என்று ராஜினாமா செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# HARTEX
ESTABLISHED 1969
THE GREAT OUT DOORS
COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR · RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS · CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS · HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING · GLOVES · HEADWEAR · HIKING BOOTS



Competitive prices



55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

To Advertise 07957681944

**Advocates - Lawyers - Solicitors**
Specialise in Buy & Sell Off-Licence shops & Resturants Including Alcohol Licensing
அற்கஹோல் லைசன்ஸ் உட்பட ஒப் லைசன்ஸ் கடைகளையும் உணவகங்களையும் வாங்குவதிலும் விற்பதிலும் தேர்ச்சி பெற்றவர்கள்.
also Immigration, Conveyancing, Divorce, Wills & Probate, Civil Litigation
020 8206 3530
595 Kenton Rd, kenton, Middlesex HA3 9RT
Alliance SOLICITORS
www.alliance-solicitors.com

**London Airport Taxi Service**
0870 042 8886 BAtransfer.COM
Transfers To and From All London Airports to Anywhere in UK
£2.00 Off PER JOURNEY WHEN YOU HAND OVER THIS VOUCHER TO DRIVER
விமானநிலையம் செல்லவும் அழைத்து வரவும் அனுபவம் பெற்றவர்கள்.

**Morjarias Toys & Gifts**



Car Flags
Summer Toys
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames

Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £



Trade Only
Morjarias House
North Circular Road
London NW10 7UD
0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | | |
|---|---|---|---|
| Mon to Fri | 10am | - | 6pm |
| Late Night Thur | 10am | - | 8pm |
| Saturday | | | Closed |
| Sunday | 9am | - | 3pm |

**GALAXY WINDOWS**
Special Interest Free Offer
SUMMER BONANZA
Double Glazed Windows



from just £99 each
+ 1/2 price openers & fittings
Superior quality products.. High Standard of fitting and after sales service...
Quality Conservatories at trade prices
Telephone Galaxy Windows Hotline
020 8427 3888
FENSA
All uPVC is manufactured to British Standard specifications & new part 'L' compliance giving you total peace of mind
Subject to Conditions available on request

**J K SHAH**
J.K. Shah (B.A.Hons) F.C.C.A
Chartered Certified Accountant
Accountants, Tax and Business Advisers
Complete Accounting Services
ACCOUNTANCY
Accounts prepared for Sole Traders, Partnerships & Limited Companies
TAXATION
All kinds of taxation matters
VAT & BOOK-KEEPING
Competitive Book-keeping and VAT Service, Using Computerised System
PAYROLL
Comprehensive Computerised Payroll Services
ACCA
572-574 Romford Road, Manor Park, London E12 5AF
Tel: 020 8553 2436 Fax: 020 8514 6939
E-mail: info@jkshah.com
Internet: www.jkshah.com

**furniture essentials**
Quick & Simple Living Solutions
Sofas, Sofabeds & Dining Furniture
EXTRA 10% off our Current Sale Prices with this Advert.
13 Brentside Works, North Cicular Rd
Wembley NW10 7SX
Call: 020 8965 8588

**MANUFACTURING LTD**
T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
22 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ
mbs
-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm
Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fittied Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products
e-mail: mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com

**V.J.CARPETS**
110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033
SPECIALOFFERS
FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR WITH CARPETS OVER 5.96 S.Q. MTR
WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

HEAVY DOMESTIC CUT PILE GRAPHIC
WAS £10.75 sq.mtr
NOW £8.36 sq.mtr
CONTRCT CORD BUILT IN UNDERLAY OR WOVENBACK
£2.99YD £3.58 SQ MTR
ASCOT CUT PILE GRAPHIC
WAS £10.75 SQ.MTR
NOW £8.36 SQ. MTR

HEAVY PRINTS BUILT IN UNDERLAY
was £6.99 SQ.MTR
NOW £4.77 SQ .MTR
HEAVY DOMESTIC WILTONS
WAS £14.34 SQ.MTR.
NOW £10.75 SQ.MTR.
LIMITED STOCK
HEAVY DOMESTIC TWIST
WAS £11.55 SQ. MTR
NOW £9.55 SQ. MTR.

FITTED FREE ON ALL CARPETS OVER £4.77 SQ. MTR.
THIS IS JUST A SMALL EXAMPLE OF A LARGE SELECTION. WE WELCOME YOU TO VISIT OUR STORE ROOM OR CALL US
TEL.020 8574 9033
10% EXTRA DISCOUNT
OPEN: MON - SAT
9.00AM TO 6.00PM

**skylord travel**
*Skylord Travel Special Offers*

| | | |
|---|---|---|
| Bangalore from £325 | Bombay from £265 | Chennai from £325 |
| Calcutta from £365 | Colombo from £380 | Delhi from £265 |
| Hyderabad from £370 | Trivandrum from £325 | Above Fares are nett exclude taxes & Fuel Surcharges |

Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111